மனோகரா பிக்சர்ஸ்

மனோகரா

கதை-வசனம்

மனோகரா

முழு வசனம், பாடல்கள்

திரைக்கதை - வசனம்

கலைஞர் மு கருணாநிதி

விலை ரூபாய் 2-50

நடிகர்கள்

சிவாஜிகணேசன்	மனோகரன்
சதாசிவராவ்	புருஷோத்தமன்
நடராஜன்	உக்கிரசேனன்
ஜாவர் சீதாராமன்	சத்தியசீலர்
ராஜேந்திரன்	ராஜபிரியன்
ராதாகிருஷ்ணன்	வசந்தன்
பாண்டியன்	விகடன்
சாமிநாதன்	பௌத்தாயணன்
முஸ்தபா	கேசரிவர்மன்

நடிகைகள்

ராஜகுமாரி		வசந்தசேனை
கண்ணாம்பா		பத்மாவதி
கிரிஜா		விஜயா
முத்துலட்சுமி		மாலினி
சரஸ்வதி	(நாடக)	வசந்தசேனை
பண்டரிபாய்		பத்மாவதி

பாடல்கள்
உடுமலை நாராயணகவி, சுந்தரவாத்தியார்,
சுரபி, செல்லமுத்துகவி.

இசை
வெங்கட்ராமன்

பின்னணி
ராஜா, மோத்தி
ஜிக்கி, டி. வி. ரத்தினம் ஜயலட்சுமி

கதை
பி. சம்பந்த முதலியார்

திரைக்கதை - வசனம்
கலைஞர் மு. கருணாநிதி

சீனரியோ & டைரக்ஷன்
பிரசாத்

தயாரிப்பு
எம். சோமசுந்தரம்

கதை, வசனம், பாடல்கள்

(குகை உட்புறம் அரூபம் ஒரு சிலையை செதுக்கிக் கொண்டிருக்கிறது, அதன் எதிரே புன்னகையுடன்)

பெரியவர் வெற்றி...வேதனையை பொருட்படுத்தாதவனுக்கு கிடைத்த வெகுமானம்!....அநேக வருஷங்களாக பட்ட பாட்டிற்கு சரியான அறுவடை! இனி நினைத்ததையெல்லாம் செய்துமுடிப்பேன்....கேசரிவர்மா! கவலைகள் படிந்த உன் கண்களிலே களிப்பு பொங்கட்டும். துயர மேகங்கள் உன்னைவிட்டுத் தூர ஓடட்டும்! தொல்லைகள் இனி நமக்கு தூசுகள் ஹ...ஹ...ஹ...வெற்றி! வெற்றி!!

(கேசரிவர்மன் குரல்மட்டும் கேட்கிறது. சிற்றுளியும் சுத்தியும் தங்கள் வேலையை நடத்திக்கொண்டு இருக்கின்றன)

கேசரிவர்மன் : குருதேவா! உண்மைதானா? நான் தெரியவில்லையா உங்கள் கண்களுக்கு!....

பெரி : ஆமாம் கேசரிவர்மா! அரூபமாக விட்டாய், கண்டுபிடித்த மருந்து வேலைசெய்யத் துவங்கிவிட்டது. கிடைக்காதது கிடைத்து விட்டது. என் ஆராய்ச்சிக்கு அமோக வெற்றி. எல்லோரையும் நீ பார்க்கலாம் ஆனால் உன்னை யாரும் பார்க்க முடியாது.

கேசரி குருதேவா! பதிமூன்று வருடங்கள் பதறிக் கிடந்தேன். அந்தப் பாவியை பழிவாங்க வேண்டுமென்று! பாதையகுத்து கொடுத்துவிட்டீர்களிப்போது! சுவாமி! அரூபம் அதிக நாள் இருக்காதா?

பெரி : இருக்காது ஆனால் இன்னும் முயன்று பார்க்கலாம். நான தேடும் மூலிகைகள கிடைத்துவிட்டால் அரூபயாக மட்டுமல்ல, அழியாமலேகூட இருக்கலாம். ஆனால் கேசரிவர்மா நல்லவர் வாழ இதைப் பயன்படுத்து!

கேசரி நல்லவர் வாழ பயன்படுத்துவேன்! அதே சமயத்தில் இந்த நாசகாரியின் நரிவேலைகளை அம்பலமாக்குவேன். பாவி பழிகாரி! கணவனுக்கு விஷங் கொடுத்த பத்திரகாளி! உன் விஷத்தால் செத்துவிடவில்லையடி கேசரிவர்மன்! இருக்கிறான் உயிரோடு! சாகவில்லை-சாக மாட்டான், உன் சதியை வெளிப்படுத்தாமல்! வஞ்சகி.... வாய் ஜாலக்காரி!

பெரிய : ஹ....ஹ....ஹ....

கேசரி : குருஜி.

பெரிய : சிலையப்பா அது!

கேசரி : சிலைதான்! ஏன் செதுக்கினேன் இவளை! சித்ரவதை செய்வதற்கு ஒத்திகைபார்க்க; வசந்தசேனை! உன் விழியில் வேல் சொருகுவேன்-கூந்தலுக்கு தீ மூட்டுவேன்—

கொவ்வை உதடுகள்!... அவைகளில் கூரிய ஊசிகளை குந்துவேன் . கண்ணடிக் கன்னம்! ஹ ஹ ஹ கட்டாரி யால் கிழிப்பேன்—காண்பவர் வெறி கொள்ளும் மேனி .. கண்டம் கண்டமாக வெட்டி எறிவேன்! ஆரம்பமாகி விட்டதடீ அருபத்தின் அற்புத வேலைகள்! மாயக்காரி தொடங்கி விட்டதடி உன் மாஜி கணவனின் பழிவாங்கும் படலம். நடமாடும் பாம்பே! நாசத்தின் நர்த்தனமே நயவஞ்சகப் பிசாசே.. சிரிக்கும் சிலந்தியே....

வசந்தசேனை : (சிரிப்புடன்) பைத்தியக்காரி! இப்போது நினைத்தாலும் நான் பட்டமகிஷி ஆகமுடியுமடி !...

தோழி: அதுதாம்மா எனக்கும் ஆசை. ஆனால் மகாராணியும் இளவரசரும் உயிரோடு இருக்கும்போது

வசந்தி : மகாராணி— இளவரசர்.... இரண்டும் உயிர்ப்பிணங் கள்! நான் சிரித்தால்போதும், சிம்மாசனமே கிடைக்கும். மயக்குகின்ற ஒரு பார்வை—இந்த மண்டலமே என் காலடியில்! மகாராஜாவின் பிரேமை ராணியடி நான்! நினைத்தால் போதும்-வசந்தசேனை ராணி! அவன்மகன் வசந்தன் இளவரசன்!

0 0 0

வசந்தன்: (மாளிகையில்) ஆமாமாம் சந்தேகமில்லை விகடா! ராஜாமகன் இளவரசன்! இதிலே எனக்கு சந்தேகமில்லை

விகடன்: வசந்தா! இதிலே மட்டுமா நமக்கு சந்தேகமில்லை... எந்த நாளிலும் எதிலும் நமக்கு எள்ளளவாகிலும் உள்ள படிக்கு நமக்கு சந்தேகமில்லை.

(சந்தேகமில்லை பாட்டு)

0 0 0

பத்மாவதி : (அரசர் படத்துக்கு முன்பு) சுவாமி நாமிருவரும் இனிமேல் ஒன்று சேரும் நாளே வராதா? என் வாழ்க்கை யிலே நான் யாருக்கும் எந்தத் தீங்கும் செய்தது கிடை யாதே! என் வாழ்க்கையைக்கெடுத்த வசந்தசேனையைக் கூட மன்னித்து இருக்கிறேன் அவளிடம் வாஞ்சை மிகுந்த உங்களுக்கு வருத்தம்வரக்கூடாதுஎன்பதற்காக அப்படியே நான் யாருக்காவது தீமை செய்திருந்தாலும் அதற்கு பல ஆண்டு காலம் தங்களைப் பிரிந்து வாடுகி றேனே! இந்த தண்டனை போதாதா? சுவாமி! கண்மணி மனோகரனின் பிறந்த நாளும் வருகிறது. எழில் பூத்த நம் செல்வத்தை இருவரும் உச்சி மோந்து அன்பு வாழ்த்து

கூறுவோமே அந்த இன்ப நாள் இனிமேல் வரவே முடியாதா சுவாமி !

0 0 0

பெரி : (குகையின் உட்புறம்) எங்கே கேசரிவர்மா அவசரமாக புறப்படுகிருய் ?

கேசரி நாடகத்திற்கு அதோ அவர்களைத்தான் ஏற்பாடு செய்திருக்கிறேன்.

பெரி : மறந்துவிட்டேன் இன்று மனோகரன் பிறந்த விழாவா? உம் ...நாடகத்திற்கு என்ன பெயர் வைத்திருக்கிருய் ?

சேகரி போர்வாள்.

பெரி: சபாஷ்...தடையொன்றும் கிடையாதே நடத்துவதற்கு

கேசரி : கிடையாது காரணம், கதை அவர்களுக்கு புரியாது....

பெரி: வசந்தசேனைக்கு உன் நாடகத்துப்புனைப்பெயர்என்ன

கேசரி: தேவசேனு !

பெரி : உன் பெயர் ?

கேசரி: ஈஸ்வரிவர்மன், புருஷோத்தமனை உத்தமபுருஷனென்று மாற்றியிருக்கிறேன்.

பெரி : கட்டாயம் புரிந்து கொள்வார்கள் கதையை !

கேசரி: புரியத்தானே வேண்டும். அப்போதாவது புருஷோத்தமனுக்கு புத்தி வராதா ?

பெரி : உம் முயற்சி செய்து பார் !

கேசரி: வருகிறேன் குருதேவா !

பெரி : ஜாக்ரதை.

0 0 0

(அரண்மனையில், வசந்தசேனை முத்தாரத்திலுள்ள பதக்கத்துள்ளே மறைத்து வைக்கப்பட்டிருக்கும் உக்ரசேனன் படத்தை பார்த்து கொண்டிருக்கிருள்)

தோழி என்னம்மா தினம் தினம் எதை மறந்தாலும் இதை மறப்பதில்லை நீங்கள்? அப்படியென்ன இந்தப் பதக்கத்தில் கண்ணை இழுக்கும் காந்தம் இருக்கிறது ?

வசந்தி காந்தமில்லையடி! ஆபத்தில் கைகொடுக்கும் கடவுள்

தோழி : கடவுளா ?

வசந்தி: பாரேன்.. (படத்தை காட்டுகிருள்)

தோழி ! அம்மா, மகாராஜா ! வருகிருர்.

புருஷோத்தமன் இன்னுமா முடியவில்லை அலங்காரம் ? நேரமாகி விட்டதே நாடகத்துக்கு.

வசந்தி : இதோ முடிந்து விட்டது.

புரு : மறந்து விட்டாயா ? இன்று மனோகரன் பிறந்தநாள்

வசந்தி : மறப்பேனு செல்வன் பிறந்த நாளை எனக்கு வேறு ஒரு நினைவு வந்தது.

புரு : எது வசந்தி ?

வசந்தி நமது காதல் விழாவின் பதின்மூன்ருவது ஆண்டு

புரு : ஆமாம் கண்ணே வருடங்கள் ஓடியதே தெரியவில்லை (வந்து வசந்தியை தொடுகிருர்.

வசந்தன்: நெருப்பைத்தொடாதே சுட்டுவிடும்.தேளை கொஞ்சாதே கொட்டிவிடும் ! இதிலெல்லாம் எனக்கு சந்தேக மில்லை ! சந்தேகமில்லை எப்படியம்மா ன்னைக்கு புதுப் பாடம் எம்மா அடே அப்பா அம்மா அழகைப் பாருப்பா எனக்கும் அம்மாவைப்போல ஒரு பெண்ணு கிடைச்சா !

வசந்தி : சீ பேசாமலிரு

வசந்தன் : பிள்ளையாரு மாத்திரம் கேட்டாரே அவுங்கஅம்மா பார்வதியைப் போல பெண்ணு நாங்கேட்டா என்னுப்பா

புரு : தீரவே தீராது இது !

வசந்தன் : சந்தேகமில்லை

புரு : வசந்தி நான் போகிறேன் சீக்கிரம் புறப்படு

0 0 0

சத்தியசிலர் : (மனோகரன் மாளிகையில்) வஞ்சகம் வாழ்ந்தது கிடையாது கொடுமை நிலைத்ததில்லை இதைக்கேள் விழா உன் பொருட்டு நடைபெறுகிறது விழாவுக்கு நீ வந்து தான் தீரவேண்டும்.

மனோ : என் பொருட்டு விழா நடைபெறுகிறது மனப்பூர்வ மாகவா ? இல்லை சம்பிரதாயத்திற்கு !

சத் : தவறு மனோகரா புத்திரவாஞ்சையற்றவரல்ல புருஷோத்தமர்

மனோ : உங்களுடைய ஆசை அந்த வாஞ்சையும் அற்று விடக்கூடாது என்று ஆனுல் அப்பா அணு அணுவாக விஷமாக்கப்படுகிருர்.

சத் : எப்படியானுலும் சரி ராஜ குடும்பத்திலே தகராறு இப்படி பிறர் பேசக்கூடாது.

மனோ : உயர்ந்த எண்ணம் ஆனுலும் அந்த ஊர் கெடுப்பவ ளுக்கு உதயமாகியிருக்க வேண்டும்

சத் : மனோகரா உன்னுடைய பிறந்த நாள் அதிலே நீ இல்லை யென்ருல்,

ராஜபிரியன் : அரசர் கவலைப்பட மாட்டார் அந்த ஆனந்த வல்லி அருகிலே இருக்கும்போது !

சத் : உம் இருவருமே இளைஞர்கள் துடிக்கிறீர்கள் !

மனோ: அமைதி கற்பிப்பது விவேகிகளின் பண்புதான் ஆனால் ஆமைபோல் அடங்கி கிடப்பது வீரர்களின் பண்பல்ல அந்த மயக்கு மொழிக்காரியும் வருவாள் அங்கே என் மாதாவும் வரவேண்டும் முடியாது என்றால் அதைக் காண முடியாது.

பத் : மனோகரா !

மனோ : அம்மா !

பத் : செல்வா கேட்டுக்கொண்டுதான் வந்தேன் ராஜப்ரியன் கூட சீறி விழுந்தானே. ஏன் மந்திரியாரே.. மனோகரன் ஒட்டாயம் நாடகத்துக்கு வருவான்.

0 0 0

நாடகம் ! கேசரிவர்மன் திரைக்கு பின்னாலிருந்து பேசுகிறான்) கற்பனைக்கதையல்ல நீங்கள் காணப்போவதுசிந்தனை சித்திரம். சிங்காரியால் சீரழியும் ஓர் சாம்ராஜ்ய சரித்திரம்! வேந்தன் உத்தமபுருஷன் ஒரு செந்தமிழ்ச்சோலை.

அவன் சிந்தைக் குளிப்பாட்டிய தென்றல் கமலாவதி பட்டத்தரசி !

பட்டத்தரசியின் தந்தையை பாண்டியன் கொன்றான். சிந்தை குலுங்கும் செய்தி ஏந்தி வந்தான் ஒரு சைத்திரியன் ஈசுவரிவர்மன் !

அவன் மனைவி தேவசேனா ஒரு சித்ராங்கி.

தென்றல்போல வந்தாள்

புயலாக மாறினாள், அந்தப் புன் சிரிப்புப் புயல் புகுந்த கட்டம் !

நாடகம் துவங்குகிறது)

கமலாவதி : அப்பா அப்பா

உத்தமபுருஷன் : அழாதே கமலா அழாதே ! வர்மா மாமா தமது அந்திய காலத்தில் சொல்லிய செய்தி ஏதாவது ?

ஈஸ்வரிவர்மன் : இருக்கிறது ப்ரபூ என் பேரன் அஜயன்தான் பாண்டியன் மீது பழி தீர்த்துக் கொள்ளவேண்டும். என் நவரத்ன சிங்காதனத்தை மீட்பதும் அவன் பொறுப்பு தான். இந்தபழி தீர்க்கும் பாரம்ராஜாஉத்தமபுருஷனுக்கு கிடையாதென்பதையும் திட்டவட்டமாக கமலாவதிக்கு தெரிவித்து விடு. மகாராஜாவிற்கு என் மனப்பூர்வமான ஆசீர்வாதம் இதுதான் மஹாராணி தங்களுக்குத் தங்கள் பிதா கூறிய செய்தி கடைசியாக இந்தவாளை தங்களிடம் கொடுக்கச் சொல்லியதும் மஹாராஜாவின் உயிர் அமைதியாக பிரிந்து விட்டது.

பத் : அப்பா

உத் : மாமா....
அஜயன் : அம்மா....
கம : அஜே....
அஜ : ஏம்மா அழரே ?
கம : இல்லேடா கண்ணு அஜயா உன் தாத்தாவைக்கொன்ற அந்த பாண்டியனை
அஜ : கொடம்மா கத்தி அவன் தலையை இப்பவே வெட்டி கொண்டாறே.
கம : ஆம் அதில் சந்தேகமே இல்லையடா பெரியவனானதும் நீ நிச்சயமாய் செய்வாய்

(நாடகம் பார்த்து கொண்டிருக்கும் பத்மாவதி பக்கத்திலிருக்கும் மனோகரன் மீது கைவைக்கிருள்)
மனோ : என்னம்மா ?
பத் : ஒன்றுமில்லையடா கண்ணே நாடகம்
வர்மன் : அப்போது எனக்கு விடை
உத் : வர்மரே நீர் நமது அரண்மனையிலேயே தலைமை சைத்திரியராக இருக்க வேண்டும்.
வர்மன் : என் பாக்கியம் பிரபு !
கம : உன் மனைவிக்கு இஷ்டமிருந்தால் அவள் என்னிடமே பணிப்பெண்ணாக இருக்கலாம்.
வர் : எங்கள் பாக்கியம் தாயே !
தேவசேன : (தனக்குள்) பணிப்பெண் நான், பாராளும் மகாராணி இவள் நானே காலம் மாறினல் :
விகடன் : (நாடகம் பார்த்து கொண்டு) அம்மா ! அம்மா ! இவ பலே ஆள்தான் !
சத் : இப்படித்தான் ஒரு சைத்ரீகன் வந்தான் அரண்மனைக்கு பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு
ராஜப்ரியன் : அவன் பெயர் ?
சத் : கேசரிவர்மன் !

(நாடகத்தில் தேவசேன அரசன் மயங்கும்படி நடனமாடுகிருள். அரசன் முத்துமாலையை பரிசாகத் தருகிருன்)
வர்மன் : (தேவசேனவிடம் உனக்கு ஒரு சந்தோஷச்செய்தி நமது நாட்டு கலாமந்திரத்தை உத்தேசித்து தக்ஷிணப் பிரதேசம் முழுவதும் நான் சுற்றுப்பயணம் செய்ய வேண்டி இருக்கிறது. அது மகாராஜாவின் ஆக்ஞை !
தேவசேன : எனக்கு அது சந்தோஷச் செய்தி ஹூம் ! அட ஈஸ்வரா !
வர்மன் : அவசரம்தானே கூடாது உன்னையும் நான் அழைத்துப் போகப் போகிறேன்.

சேனு : நிஜந்தானு அத்தான் ? இப்பத்தான் நீங்கள் என் பொன்றேதான் அப்பா கூண்டுகிளி மாதிரி இதுவரை காலம் தள்ளி வந்தேன் அத்தான் இதோ மகாராணி யிடம் உத்தரவு கேட்டு வந்து விடுகிறேன்.

(சொல்லியபடி கீழே விழுகிருள்)

சேனு : ஆ! ...
அம்மா !....அம்மா ! சொன்னு கேட்டாத்தானே

வர்மன் : சேனு !

தோ : மறுபடியும் மயக்கம் வந்திடுச்சுங்களா ?

வர்மன் : அப்போது இதற்கு முன்பும் ?

தோ : என்னங்க எஜமான்....தெரியாத மாதிரி பேசுறிங்க அம்மா இன்னும் ஒன்பது மாசத்திலே ஒரு குழந்தைக்கு தாயாகப் போகுது.

வர்மன் : ஆஹா...சேனு கர்ப்பிணி

ராஜப்பிரியன் : அப்படியாஞல் வசந்தன் யார் மகன் ?

சத்தியசீலா : நாடகத்தைப் பார் !

ராஜப் : நாடகமா நடந்ததா ?

0 0 0

நாடகத்தில் அரசனும் தேவசேனும்பாட்டு நிலாவிலே)

கமலாவதி : உம் நகரசோதனை இன்று சீக்கிரத்தில் முடிய வில்லை போலிருக்கிறது.

ராஜப் : ஆம் ஆம் நேரம்தான் ஆகிவிட்டது வழியில் எதிர் பாராத ஒரு வேடிக்கை...

கமலா : வேடிக்கையாகத் தானிருக்கிறது உங்கள் பேச்சும் இங்கு நான் விழித்து கொண்டிருப்பதுகூட உங்களுக்கு எதிர்பாராத ஒரு வேடிக்கையாகத்தான் இருக்கிறது... ஸ்வாமி....நகர சோதனைக்கா இந்த நாகரீகஉடைகள்?.... நல்லவாசனை ! ஜவ்வாது பொட்டு !..ஓ! மாப்பிள்ளை மணவறையிலிருந்து இப்போதுதான் திரும்புகிறீர்கள் போலிருக்கிறது . தங்களின் புது மணமகள் யார்தான் ஸ்வாமி ?

ராஜா : நாவை அடக்கிப்பேசு....போ அப்புறம்

கமலா : உங்களை இவ்வளவு கேவலமாக மாற்றி விட்டது. அந்த சண்டாளியின் சகவாசம்
ராஜா கமலாவதியை கன்னத்தில் அறைகிருர்

கமலா : மகாராஜா! தக்க நியாயவாதங்களுக்குப் புறம்பாக தான்தோன்றி முறையில்பேசி ஆகாரணமாக என்னை அடித்து புண்படுத்தவிட்ட உங்களை நான் இனிப்பார்க்கத் தயாராக இல்லை. உங்களை காணவும் என் கண் கூசு கிறது. வேசி தேவசேனையின் நேசத்தின்வேகம்தணிந்த

பின் தாங்களாக வந்து என்னை பார்த்தாலொழிய நானாக வந்து தங்களை பார்க்கமாட்டேன் என்பதையும் நன்றாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். மகாராணி கமலாவதிக்கு உங்கள் புதிய ரதிதேவியின் அழகில்லாமலிருக்கலாம். ஆனால் அவளின் இந்த மஞ்சள் கயிற்றுக்கு ஒரு தனி மகிமை உண்டென்பதை மட்டும் உணரும் காலம் உங்கள் வாழ்க்கையிலே ஒரு நாள் நிச்சயம்வந்தே தீரும் போய்வாருங்கள் உங்கள் புண்ணிய சேவைக்குபோங்கள்

ராஜா : நீ சொல்ல வேண்டாம்! நானே போய்க்கொண்டு தான் இருக்கிறேன்

சேனா : (தோழியிடம்) இந்தப் புள்ளிதான் அடையாளம்... இதில் போடு விஷத்தை பத்ரம்...

வசந்தி : (நாடகம் பார்க்கும் போது) மகாராஜா இனிமேல் என்னால் இருக்க முடியாது....உள்ளம் கொதிக்கிறது.

சேனா அத்தான் சூடானபால். தலைவலி பறந்து விடும்...

வர்மன் : சேனா காமக்கள்ளிகள் தங்கள்கணவன்மார்களுக்கு பாலில் விஷம் கலந்துகொடுப்பார்களாம் நீகேள்விப் பட்டிருக்கிறாயா?

சேனா : இல்லையத்தான ஆனால் இந்தப்பாலில் அப்படி யொன்றுமில்லை.

வர்மன் : நீ சொல்லும்போது எனக்கென்ன பயம்? சேனா இப்படி வா...என்கையால் உனக்கு பாலைக்கொடுத்து ரொம்ப காலமாயிற்றல்லவா?

சேனா : ஆமாம் ...அதெல்லாம் கலியாண புதிதில்

வர்மன் : சீ....அப்படிச் சொல்லாதே குடி....

சேனா : தேவாமிர்தமாயிருக்கிறதத்தான்;

வர்மன் : சரி அதைக்கொடு நானே குடிக்கிறேன்.

வசந்தன் : வேண்டாம்! வேண்டாம்! விஷம்!

சேனா : ஹா ஹா ஹா விஷம் வேலை செய்கிறதாக்கும்...புத்திசாலிகளின் போக்கே இப்படித்தான்....

வர்மன் : அடி ராக்ஷஸீ! சோரம் செய்தது போதாதென்று சொந்தப் புருஷனையும் மருந்திட்டு கொல்கிறாய் ஆ....

சேனா : உன்னால் நான்பட்ட துன்பங்கள் ஒன்று இரண்டா? என் உயிர்க்காதலன் ருத்ரசேனனிடமிருந்து என்னைப் பிரித்தாய் இப்போது என் கத்ருது பூத்துக்காய்த்து கனியாகும் நிலைமையிலிருக்கிறது உன்னை உயிரோடு வைத்திருந்தால்வேரையல்லவாவெட்டிப்போடுவாய்? அதனால் தான் நான் முந்திக்கொண்டு விட்டேன் உன் தலைவிதியைத்தடுக்கயாரால்தான்முடியும்மனைவியின்மனதறிந்து

நடக்கத் தெரியாத மடையன்களுக்கெல்லாம் இதே கதி தான் எந்தக்காலத்திலும்... (வர்மன் சாகிருன்)

(வசந்தி நாடகத்தை நிறுத்த சொல்லி கூச்சலிடுகிருள்)

ஒலி : கணவனைக் கொன்ருள் ! காட்டாற்றில் உருட்டினுல் காதகீ ! இன்னும் உயிர் வாழ்கிருள் ! இன்னும் உயிர் வாழ்கிருள்.

0 0 0

வசந்தி : (அந்தபுரத்தில் ஆத்திரமுடன்)எங்கேநாடகதும்பல்

வீரன் : விரட்டிக்கொண்டே போனேம் தப்பிவிட்டார்கள்...

வசந்தி : தைரியசாலிகள் ! வெட்கமில்லை. சீ ஓடுங்கள்.

தோழி : ஏம்மா நயடகக்காரர்கள் !

வசந்தி : ஆங் பரிசு கொடுக்க !

தோ : கொடுக்கவேண்டியது தாம்மா....நம்மைகாட்டிகொடுக்கிற கதையா இருந்தாலும் நடிப்பு நல்லாயிருந்தது.

வசந்தி : சீ என்னடி விமர்சனம்... போடி ! உம் !

(தனக்குள் நாடகம் .. என்னை வைத்து எழுதப்பட்டது கேசரிவர்மன் உயிரோடு சேச்சே, பிணம் பிழைப்பதாவது.... ஒரு வேளை....விஷம் சரியாக வேலை செய்யாமல்....

வசந்தி : (அரசர் வர) ப்ரபூ

அசட்டு சிரிப்புடன் அரசர் உட்காருதல்)

வசந்தி : வழக்கமான புன்சிரிப்பு இல்லை வாட்டத்தோடுஇருக்கிறீர்கள் என்ன காரணம் ஸ்வாமி ?

அரச : ஒன்றுமில்லை....

வசந்தி : பிறகேன், கண்ணே என்ற கனிமொழி உதிரவில்லை கண்களிலே கலக்கம்....கண்ணாளா ! பால் ?

அர பாலா ?

வசந்தி: ஏன், ஓகோ! நாடகம் நினைவுக்கு வந்து விட்டதோ

அர : அதெல்லாமில்லை....

வசந்தி : பெருமூச்சால் பேசுவானேன் என்னையே கேளுங்கள் என் கணவர் கேசரிவர்மன் நம்காதலை காண சகிக்காமல் ஊரைவிட்டே ஓடிவிட்டார் என்று தங்களிடம் சொல்லியிருந்தேன்....

அர : ஆமாம் ! இப்போது ?

வசந்தி : நஞ்சு கொடுத்துத்தன் கணவனைக் கொல்லுகிருள் நாடக தேவசேனை! தாங்களும் அதை உண்மையென்று நம்பி "இரண்டு கிண்ணங்களையும் கையில் எடுத்துக் கொண்டு இதில் எதை வேண்டுமானுலும் தாங்கள்...."

அர : வேண்டாம் நீயே கொடு ..

வசந்தி : இல்லை தாங்கள் விரும்புவதை எடுத்துக்கொள்ளுங்கள். சந்தேகம் ஒரு சங்கடமான நோய். காதல் வாழ்வை

உண்டாக்கும் கட்டாரி. அது வீரரையும்கோழையாக்கும் உம் எடுத்துக் கொள்ளுங்கள் (யோசித்து) அதுகூட வேண்டாம் நானே இரண்டையும் சாப்பிடுகிறேன்.

(ஆச்சரியமாய்)

வசந்தி : என்னை மன்னித்து விடுங்கள் மகாராஜா? பதின் முன்று ஆண்டுகளாக தங்கள் பத்தினியாக வாழ்ந்தேன். அதை வைத்துக் கேட்கிறேன். ஆபரணம், ஆடம்பர வாழ்வு, அரசபோகம் போதும் தாருங்கள் தயவுசெய்து காஷாய உடை, கையிலே ஒரு ஓடு மறுக்காதீர்கள்.... போக விடை கொடுங்கள்.

அரச : போவதா நீயா? எங்கே கண்ணே?

வசந்தி : உலகம் மிகப் பெரியது பிரபு! அதன் ஜனக்கூட்டத்திலே நானும் ஒருதுளியாகிவிடுகிறேன் தங்கள்பெயரை ஜபித்துக்கொண்டு என் ஜன்மத்தை கழித்துவிடுகிறேன். உங்கள் காலடியில் கிடைக்கும் என் இன்ப வாழ்வுக்கு தீ மூட்டத் திட்டம் போட்டு விட்டார்கள்!

அரச திட்டம் யார்?

வசந்தி : மகாராணி தான்!

அர யார் பத்மாவதியா?

கேசரியின் குரல் இல்லை பச்சைப்புளுகு! பாராளும்வேந்தே பாகு மொழியில் பலியாகாதே!

வசந்தி பாருங்கள் ஸ்வாமி பாருங்கள் நான் கேள்விப்பட்டது உண்மைதான். மகாராணி மந்திர ஜாலம்வேறு நடத்துகிறார்களாம் உங்களிடமிருந்து என்னைப் பிரிக்க ..

அர : கவனிக்க வேண்டியதுதான்! (காவலரிடம்)யார்இங்கு பேசியது என்று தேடிப்பாருங்கள்.

(சிப்பாய்கள் சப்தம் வந்த திசை நோக்கி ஓடுதல்)

0 0 0

மனே : புரையோடி விட்ட புண்ணுக்கு புனுகுப்பூச்சு பொல்லாங்குக்காரியின்போலி வேடத்தை பொசுக்க பொறுமை போதுமம்மா பொறுத்ததெல்லாம் உத்திரவு கொடுங்கள் உருத்தெரியாமல் ஆக்குகிறேன் அந்த ஊர்கெடுப்பவளை

பத்மா : மனோகரா இரு

(பெட்டியிலுள்ள வாளை மனோகரனிடம் கொடுக்க)

மனே : அம்மா! ஒரே வீச்சு; வேஷக்காரி வசந்தாதொலைந்தாள்!

பத் : பொறு செல்வா....அதைவிட ஒரு புனிதமான காரியத்தில் உன்னை ஈடுபடச் சொல்கிறேன்.

மனே : என்னம்மா அது?

பத்மா : இந்தவாள் எது தெரியுமா?—

மனோ : நாடகத்தில்கூட இதுமாதிரி ஒரு வாள்...ஆமாம் பார்த்தேன்

சத்யசீலர் : (மாளிகையில்) நாடகத்திலே வந்தவாள், போலி வாள் ! நான் சொல்வது போர்தாள்! மனோகரனின்பாட்டனு-மகாராணியின் தந்தை அதிவீர சேரருடையது அந்த வாள் !

ராஜப்ரியன் : அதிவீர சேரன் நாடகப்பெயர்...அதி தீர சூரர்....உம் அப்புறம் ?

சத்ய : பாண்டியன் முத்து விஜயன் ...எதிர்பாராத முறையில் மனோகரனின் பாட்டனுரை ஜெயித்து ரத்ன சிம்மாசனத்தையும் கைப்பற்றினுன் போர் முனையில் காயம் பட்ட பாட்டனுர் சாகும்போது முத்து விஜயனைப் பழிவாங்கும் பொறுப்பை (குழந்தை மனோகரனிடம் ஒப்புவித்து உயிர் நீத்தார் தாத்தாவின் விருப்பத்தை மனோகரனின் தடந்தோள்கள் நிறைவேற்றி வைக்க வேண்டும்.

0 0 0

பத்மா : ஆமாம் மனோகரா ! முத்துவிஜய பாண்டியன் முறியடிக்கப்பட வேண்டும். செத்துப்போனதாத்தாவின்சமாதியின் மீது வெற்றிமலர்கள் தூவ வேண்டும் நம்முடைய பரம்பரை ரத்ன சிம்மாசனம் விடுதலை பெற வேண்டும்.

மனோ விடைகொடுங்கள் வெற்றிமழை பொழியவைக்கிறேன் வீனன் முத்துவிஜயனின் விலா எலும்பை நொறுக்குகிறேன். சூது செய்து பிறர் நாட்டைச் சுருட்டிக் கொள்பவர்கள் இப்படித்தான் சுருண்டு போவார்கள் என்பதற்கு அவனை உதாரணமாகக் காட்டுகிறேன்.

பத்மா : செல்வா! சிந்தை குளிர்ந்ததடா கண்ணே நம்பரம்பரைக்கேற்பட்ட களங்கத்தை நீதான் கழுவவேண்டும்.

மனோ : பரம்பரைக்கேற்பட்ட களங்கம் பாண்டியன் முத்து விஜயனுல் மட்டுமல்ல பாதகி வசந்தசேனையாலுந்தான்! ஏமாந்த காலத்தில் வெற்றி முரசு கொட்டிய வெறியானை மட்டுமல்ல உங்கள் இன்பவாழ்வில் குறுக்கிட்ட வஞ்சகியையும் விட்டு வைக்காது இந்த வாள் !

பத்மா முதலில் நான் சொன்னதைச் செய் மனோகரா ! அப்பாவிடம் அனுமதி பெற்றுவா !

முரசறைவோன் : (தெருவில்) போர் ! பயங்கரமான போர்! நமது நாட்டின் மானத்தை, எதிர்காலத்தை நிர்ணயிக்கும் போர்! வீரர்களே தயாராகுங்கள்! வீட்டுக்கொருவர் புறப்படுங்கள். வீணர் எலும்புடைப்போம், வெற்றிக்

கொடிபிடிப்போம் ! வாரீர்! வாரீர்! போருக்கு...போர்....
போர் போர் : டம் ! டமடம் !

0 9 0

வசந் : போர் போர் வீராதி வீரர்களே கிளம்புகள் போருக்கு போரிலே இரண்டு வகையுண்டு ஒரு போரிலே மாடுகள் மேயும் அது வைக்கோற்போர்? இன்னொரு போர்வெறும் அக்கப்போர் நான் சொல்லும் போர் மண்டைகள் உடையும் சண்டையைப்பற்றி! புலிக்கண் வீரர்களே ! சிங்கங்களே ! சிறுத்தைகளே! செம்மறி ஆடுகளே! சீறிக்கிளம்புங்கள் ! உம்புறப்படுங்கள்: ஏன் நிற்கிறீர்கள் வெட்டுங்கள் வீழ்த்துங்கள்? கொல்லுங்கள் குடலைக்கிழியுங்கள்....
(வீரப்பொம்மைகள் இப்போது காட்சியளிக்கின்றன)

விகடன் : சபாஷ் வசந்தன்....நீ வீரனேதான்

வசந் : சந்தேகமில்லை.. சந்தேகமில்லை
வாளை உருவுகிறுன், வாளின் பிடிமட்டம் இருக்கிறது....
வசந்தசேனை வருகிருள் அம்பு போடுகிருன்!

வசந்தி : வசந்தா என்ன இது ?

விகடன் : போர்களத்துக்கு போவுதாம் அதுக்கு ..

வசந்தி : போர்களமா ? நீ ஏண்டா கண்ணு போகணும் ?

விகடன் : அதெல்லாம் வீரர்கள் போக வேண்டிய இடம்.

வசந்தன் : உம் ! விடை கொடம்மா

வசந்தி : உடம்பு கெட்டுவிடும் .. உனக்கு வேண்டாம் திமிர் பிடித்த வேலை....

வசந்தன்: தாயே! நீயா இப்படி பேசுவது யுத்தகளத்தில்முதுகிலே காயம் பட்டான் மகன் என்ற செய்திகேட்டு மனங்கலங்கி அவன் பால் குடித்த கெண்டியை உடைத்துவிடுகிறேன் என்று சபதம் செய்து மகன் மார்பிலே காயம் பட்டுமடிந்ததை பார்த்துமகிழ்ச்சியடைந்த வீரத்தாயின் வம்சத்தில் வந்த நீயா இப்படி பேசுவது கோழை ! கோழை ! கோழை !

வசந்தி : அய்யோ....தலைவிதி விகடா வைத்தியரை வரச் சொல்லியிருக்கிறேன்-வசந்தனுக்கு சிகிச்சைகள் ஆரம்பமாகட்டும் . சிம்மாசனம் காத்திருக்கிறது....

0 0 0

மனோ : தந்தையே ! விடை கொடுங்கள் !

அர : மனோகரா மறக்குலத்தின் மகிமை மாற்றார் உணரச் செய் ! எதிரியின் மமதையை மண்ணோடு மண்ணாக்கு !

வசந்தி: வெற்றிமாலை எடுத்து வா! (வசந்திமாலையைஎடுத்து வந்து) என் கண்மணிக்கு நான்தான் சூட்டுவேன்—

மனோ : ராஜப்ரியா வெற்றி பெறுவதற்கு முன்வெற்றி மாலை சூடுவது வீரர்களுக்கு வழக்கமில்லை.

(வசந்திக்கு முகம் மாறுகிறது)

மனோ : வருகிறேன் !

அசர : வெல்க ! வாழ்க ! (இருவரும் போய் விடுதல்)

அர : வசந்தி கோபமா கண்ணே ? மனோகரன் சிறுவன்மன்னித்து விடு !

வசந்தி : அவன்மீது எனக்கு கோபம் ஏற்பட்ட தேயில்லை! அவன் என் ஆசைச்செல்வன்–அன்புத்திருமகன்! என்னை அவன் வெறுக்கலாம் ! ஆனால் அவன் எனக்கு வெண்ணிலா ! விண் மீன் ! கன்னல் சாறு !

அர : வசந்தி !

(பத்மாவதியின் அந்தப்புரத்தின் வெளிப்புறம்)

மனோ : அம்மா !

பத்மா செல்வா !

(தோழியிடமுள்ள தாம்பாளத்தை வாங்கி மனோகரனுக்கு திலகமிடுகிறாள்)

பத்மா பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் மகிழ வெற்றி வீரனாக வா ! மனோகரா !

மனோ ; அம்மா ! வெற்றி பெற்றால் ரத்தின சிம்மாசனம் வரும் இல்லையேல் ரத்தம் தோய்ந்த இந்த வீரவாள் வரும் என் செய்திகூற ! (ரதத்தில் புறப்படுதல்)

0 0 0

(மாளிகையை அடுத்த நந்தவனம், இரவு நேரம், வசந்தசேனை தனியாக மறைந்து மறைந்து யாரையோ எதிர் பார்க்கிறாள் வசந்தசேனையின் தோழி வருகிறாள்)

வசந்தி (ஈனக்குரலில்) எங்கயடி பௌத்தாயணர் ?

தோழி : (மெதுவாக இதோ பௌத்தாயன் வருவதைகாட்டி

வசந்தி : சரி நீ போ

பௌத்தாயனரே இரவே புறப்படுகிறீரா ?

பௌத் : ஆமாம், ஏன் ?

வசந்தி : தந்திரமாக நடந்து கொள்ளும் !

பௌத் : அவனைத் திரும்பாமல் செய்து விடுகிறேன், நீங்கள் கவலையை விடுங்கள்

வசந்தி : அவன் தலை என் காலடியில் கிடக்க வேண்டும்.

பௌத் : ஊஹும் தலையைக் கொண்டு வந்தால் நமக்கு ஆபத்து. அவனை யுத்த களத்திலேயே கொன்று அவனுடைய போர்வாளை உங்களிடம் காட்டுகிறேன்.

வசந்தி ஆமாம் பழியைபகைவர்கள்மீதுபோட்டுவிடவேண்டும். மனோகரின் சாவு மர்மமாகவே இருந்துவிடும்.

பௌத் : ஓ

வசந்தி : உமக்கு ஆயிரம் பொன் பரிசு !

பௌத் : அம்மணி, நான் போர்வாளைக் கொண்டுவருவேன் நீங்கள் பொன் முட்டையை.

வசந்தி ? பூரிப்பான செய்தி கொண்டுவாரும், பொன்என்ன வைரங்களை அள்ளித் தருகிறேன்.

பௌத் : சரியம்மா

வசந்தி : ஜாக்கிரதை

0 (முத்து விஜயன் அரண்மனை) 0

சிப்பாய்-1 : அரசே ஆபத்து, ஆபத்து மதில்களுக்கு நாசம்

சிப்பாய்-2 : பூரண கும்பம் முறிந்தது

சிப்பாய்-3 : எதிரிகள் முன்னேறுகிறார்கள்.

விஜயா : அப்பா ! இந்த ரத்ன சிம்மாசனத்துக்காகஇவ்வளவு ரத்தமா ஓட வேண்டும் ?

முத்துவிஜயன் : ரத்தம் ரத்தம் எனக்கு நீச்சல் குளம் யுத்தம் எனக்கு ஒரு பொழுது போக்கு ! இதையறியாமல் மோதுகிறான் இந்த முத்து விஜயனிடம், மூர்க்கன் !

சிப்பாய் : ஆபத்து ! ஆபத்து அணிகள் சிதறி விட்டன.

முத்து : எங்கே சேனாதிபதி? எங்கே அந்த சிங்க நெஞ்சன்?

சிப் : புகழுடம்பு பெற்றுவிட்டார். வேந்தே! போர்க்களத்தில் மடிந்து விட்டார்.

சிப்பாய்-2 மீன்கொடி சாய்ந்து விட்டது.

முத்து ஆ ! இதோ புறப்பட்டு விட்டேன் எங்கே என்படைகள் (மனோகரன் படைகள் கோட்டையில் ஏறுகின்றன.)

முத்து : வாடா தம்பி! வாள் பிடிக்கத் தெரியாத வாலிபனே வளைத்து விட்டோம் கோட்டையை எனறு எண்ணிவிடாதே மமே கேள்விப்பட்டிருக்கிறேன் நீர் வீரர்....வாய் வீச்சிலே என்று !

முத்து : வாள் வீச்சிலுங்கூடத்தான்.

இருவரிடையே உக்கிரமான வாட்போர் நடக்கிறது. கோட்டை வாயிலில் இரு படைக்கும் பயங்கரமாக போரிட்டு இறுதியில் மனோகரன் படைகள் உள்ளே நுழையுமளவுக்கு முன்னேறுகின்றன. முத்து விஜயன் மனோகரன் வாளுக்கு பலியாகிறான்....கோட்டை வாசலில் மனோகரன் படைகள் வெற்றி முழக்கத்தோடு நுழைகின்றன....கோட்டை முகப்பில் பாண்டியனின் மீன்கொடி இறக்கப்பட்டு புலிக்கொடியை ராஜப்பிரியன் ஏற்றுவிக்கிறான்

0 (விஜயாவின் அந்தப்புரம்) 0

அமைச்சர் : அஸ்தமித்து விட்டதம்மா !

விஜயா : ஆ— !

அமை : வேந்தர் வெற்றிப் புன்னகையோடு வீரமரணத்தை அணைத்துக்கொண்டார்.
விஜ : அப்பா !
அமை : அமைதியாக இருங்கள்...
விஜ : அமைதியா? தந்தை பிணமானார். கொடி சாய்ந்தது முடி வீழ்ந்தது வெற்றிக்கீதம்! இன்றைக்கே முடிவு கட்டுகிறேன் ! இன்றிரவே !

0 0 0

(கூடாரத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் மனோகரனைக் கொல்வதற்கு பளத்தாயனகட்டாரி ஓங்குகிறான் அப்போது சிப்பாய் உடையில் உருவிய வாளோடு நுழைந்த விஜயா தன்னை அறியாமல் ஓவென அலறுகிறாள். மனோகரன் விழித்தெழுந்து விஜயாவின் கையைப் பிடித்துக்கொண்டு)
மனோ : யாரடா நீ ?
விஜ : நீர் உண்டாக்கிய சுடுகாட்டிலே மறு உயிர் பெற்ற பேயுமல்ல, பிணமுமல்ல! உனது பார்வையில் தட்டுப்படாமல் போன பகைவர்களில் ஒருவன் பாண்டிய நாட்டு வீரன்.
மனோ : பாண்டிய நாட்டு வீரன்! உம் பாதிராத்தரியிலேபதுங்கிப் பாயும் பட்டாளப் பயிற்சிக்கு முத்து விஜயன் ஆட்சியிலே முதல் இடம் போலும் ; முதுகெலும்பில்லாதவனே கையிலே வாளும், நெஞ்சிலே கோழைத்தனமும் கொண்டவர்களில் ஒருவன் மிச்சமா? ஓடிப்போ உயிரைக்காப்பாற்றிக் கொள்...
ராஜப் : மனோகரா ! இவனை விடக்கூடாது.
மனோ : போகட்டும் பாவம் மன்னித்து விட்டேன்.
விஜ : மன்னிப்பு கேட்கும் மரபல்ல...
மனோ : மறைந்திருந்து தாக்கும் மரபு ! மாவீரன் !
ராஜ : தூங்குபவன் தலையைத் துண்டாடுபவர்களும்வீரர்கள் தான பாண்டிய நாட்டுப் பள்ளிக்கூடத்திலே ! போடா போக்கற்ற கோழையே !
விஜ : கோழை நானே கோழை ! இதோ பார் – இப்பொழுதே நேராகவே பழி தீர்த்துக் கொள்கிறேன் !
(வாளை உருவுகிறாள், மனோகரன் அவளைத் தடுக்க அப்போது அவள் தலைப்பாகை நழுவுகிறது)
மனோ : ஆ ! பெண் !
விஜ : உன் பகைவரின் பெண் பழிவாங்க வந்தவள்.
ராஜ : இளவரசி !
மனோ : அற்புதமானகாட்சி, வளையல்ஏந்தும்கைகளிலேவாள்
விஜ : பேசாதீர் ! நீர்வீரனானால்என்னைஜெயித்தபிறகும்பசும்

மனோ : வேல்விழி மாதர்களிடம் வீரர்கள் ஜெயித்தார்கள் என்பதற்கு சரித்திரமே கிடையாது இளவரசி !
விஜ : கேலி தேவையில்லை....எடும் வாளை
மனோ : என் வாள் களத்திலேதான் விளையாடும் கனிகளைக் காயப்படுத்தாது.
விஜ : துணிவிருந்தால் வீரர் லக்ஷணத்தைப்பற்றி பேசிய தெல்லாம் வாய்வீச்சாக இல்லாமல் இருந்தால் வாளை வீசும் நல்ல தீர்ப்பு கிடைக்கட்டும்.
மனோ : நல்ல தீர்ப்பு வாள்முனை வழங்காது. இனிமேல்வழக்கு மன்றத்திலேதான் பெறவேண்டும் ! பாண்டியன் பெற்ற பைங்கொடியே நீ இப்போது கைதி ! பாதுகாப்புக்கைதி ராஜப்பிரியா ! அழைத்துச் செல் !
ராஜ : அதோ சோட்டை வாசலிலே எங்கள் கொடி ! ராஜ குமாரி மனோகரனின் அடிமை என்பதை அறிவிக்கும் கொடி.
விஜ : பேசாதே! அரசிளங்குமாரியாக வாழ்ந்தேன். அடிமை யாக வாழமாட்டேன்.வானம்பாடியாகத்திரிந்தேன்-வல் லூறுகளின் கோரப்பிடியிலேசிக்கமாட்டேன். சுதந்திரத் தென்றலிலே மிதந்தேன்-அடிமைச் சூறுவளியிலேஅகப் பட்டுக்கொள்ள மாட்டேன் மாற்றுனின் காலடியைவிட மரணத்தின் மடி எவ்வளவோ மேல்.

0 0 0

(விஜயாவின் அந்தபுரம் ''வாழ்வதோ மாது'' பாட்டு விஜயா விஷம் அருந்த முயற்சிக்கிருள்)
மனோ : விஜயா தற்கொலை கோழைத்தனம் !
விஜ : இருட்டு வேளையில் பெண்களின் அந்தப்புரத்தில் நுழைவது அதைவிட கோழைத்தனம் !
மனோ : பாவாயில்லை மரணப் புயலிலிருந்து ஒருமலர்க்கொடி யைக் காப்பாற்றியிருக்கிறேன்.
விஜ : இந்த அடிமையின் சாவையாரும் தடுக்க வேண்டாம்.
மனோ :அடிமையார் அடிமை? அழகே உருவான ராஜகுமாரிநீ
ராஜ : அதனுல்தான் சொல்லுகிறேன் அர்த்தராத்திரியில் அந்தப்புரத்தில் பிரவேசிக்கக் கூடாதென்று !
மனோ : ராஜப்ரியா ! தெரியுமா சேதி ?
ராஜ : தெரிந்துதானே வந்தேன் உன்சேதி! மனோகரா!எச் சரிக்கையாய் இருக்க வேண்டிய நேரம். ஏமாந்து விடாதே ! இளவரசி கொஞ்சநேரத்துக்குமுன் உன்னைக் கொல்ல வந்த எமன் !
விஜ : இருதயம் எனக்கும் இருக்கிறது நல்ல இருதயம்படைத் தவர்கள் ஒரு முறைதான் தவறு செய்வார்கள்.

மனே : விஜயா! நீ வாழ வேண்டியவள். அது மட்டுமல்ல என் பாதுகாப்பில் இருக்கிருய் இதுபோன்ற விபரீத செயல்களை என்னல் அனுமதிக்க முடியாது.
விஜ : உயிர் உங்கள் அடிமையல்ல அது ஆண்டவன் தந்தது.
மனே : அதைப்பற்றிவிளக்கம் நாளைவிசாரணைமண்டபத்தில்

0 0 0

(பாண்டிய மக்கள் விசாரணை மண்டபம்)

ராஜ : கொலை செய்ய முயன்ருர் தற்கொலை செய்துகொள்ள யத்தனித்தார் மன்னிக்கமுடியாத மாபெரும் குற்றங்களை செய் திருக்கிருர். ராஜகுமாரி! மக்கள் மன்றத்தின் முன் நிறுத்தப் பட்டிருக்கிருர்! எங்கள் அரதிளங்குமாரரை எனது ஆருயிர்த் தோழரை, சோழர்குலத் திலகத்தை இந்த 'மனேகரனை பிரிக்க முயன்ற யுவராணியின் ஆயுளுக்கே முடிவுகட்ட வேண்டும் அரசிளங்குமாரியாரே! உங்கள் ஆயுள் முழுவதும் நான் தரும் தண்டனையை அனுபவிக்க தயாராகுங்கள். நாளை மாலை சூரிய அஸ்தமனத்திற்குள்-காளி கோயிலில்-வேண்டாம் தண்டனையை ஒரு நாள் ஒத்திபோட நான் விரும்பவில்லை. பாண்டியநாட்டு பைங்கொடி விஜயாதேவிசோழநாட்டு சுந்தரனைகொலை செய்ய முயன்ற குற்றக்திற்காக இன்றே-இப்போதே இதே இடத்திலே-எல்லோர் முன்னிலையிலும் மனேகரனுக்கு மாலையை சூட்டி மணாளனை ஏற்றுக்கொள்ள வேண்டும்?

0 0 0

மனே : (பாண்டியன் அரண்மனை) விஜயா! இந்த அரண்மனையில் நீ ஒருத்திதான் அழகி என்று நினைத்தேன் உனக்கு போட்டியாக ஒரு பொற்கொடியிருப்பது தெரியாமல் போய்விட்டது.
விஜ : யார்?
மனே (கண்ணுடியில் தெரியும் விஜயாவின் உருவத்தைக் காட்டி) அதோ தங்க ரோஜாவிலே வைரப் பனித்துளிகளின் சதிராட்டம் இந்தச் சிரிப்பு!
விஜ : அதிருக்கட்டும்! எதிரியின் மகள் நான்! என்னை தங்கள் தாய் தந்தையர்கள் ஏற்றுக்கொள்வார்களா?
மனே : நானும் அப்படித்தான் சந்தேகித்தேன் எதிரியாயிற்றே நான், என்னை நீ ஏற்றுக் கொள்வாயோ என்று,
விஜ : உங்கள் வீரத்தைக் காதலித்தேன். என் தாய் நாட்டு மண் அதை தடுத்தது! உங்கள் வசீகரத்தில் மயங்கினேன்! அப்பாவின் பாசம் அதற்கு அணை போட்டது: முடிவில் உங்கள் நேர்மையான இருதயம் என்னை ஜெயித்து விட்டது! என்ன?

மனோ : பேசு கண்ணே பேசு! உன் அமுதூறும் இதழ்கடலின் தேனலைகளை கண்கள் எழுதிக் குவிக்கும் காதற் காவியங்களை ரசித்துக்கொண்டேயிருக்கிறேன். இதயராணி — இன்னும் கொஞ்சம் பேசு.

[சிங்காரப் பைங்கிளியே பாட்டு]

(பாடிக்கொண்டு படகில் போகும்போது பௌத்தாயன் கட்டாரியை வீசுகிருன், குறி தவறி விழுகிறது)

மனோ : என்ன! விஜயா!

விஜ : யாரோ கட்டாரியை உங்கள் மீது வீசிவிட்டு ஓடுகிருன் அதோ!

மனோ, ஏதோ சூழ்ச்சி நடக்கிறது ..நாமும் உடனே புறப்படுவோம் வா !

0 0 0

(வசந்தசேனை அந்தப்புரம், பௌத்தாயன் மனோகரனின் போர் வாளுடன் பிரவேசிக்கிருன்.)

வசந்தி : பௌத்தாயன்

பௌத் : கொண்டு வந்தேன் போர்வாளை !

வசந்தி : சபாஷ் !

பௌத் : அம்மணி ...வெற்றி கண்ட மனோகரன்....விஜயாளை விவாகம் வேறு செய்து கொண்டான்

வசந்தி : அப்படியாளுல் ...

பௌத் : கேளுங்கள் — நீச்சல்விளையாட்டு நடத்திஞர்கள். விஜயாளை விதவையாக்கிவிட்டு வாளோடு வந்து விட்டேன்.

வசந்தி : மனோகரன் இறந்து விட்டானு ?

பௌத் . நிச்சயமாக ! அம்மணி ! பாசத்தொகை !

வசந்தி : இதோ! (பொன் மூட்டையைக் கொடுக்கிருள்) பௌத்தாயனரே! இன்னொரு காரியம் ஓரே குறியில் இரண்டு வேட்டை ! பத்மாவதியிடம் இந்த செய்தியை சொன்னுல் நெஞ்சு வெடித்துசெத்துவிடுவாள் பிறகு.... நான்தான் ராணி! நீர்தான் பிரதம மந்திரி !

பௌத் : பிரதம மந்திரியா ..? அப்ப எது வேண்டுமானுலும் செய்கிறேன்....

0 0 0

தோ 1 : (அந்தப்புரம்) உம் போரிலே ஏற்பட்ட களைப்பு, புது மனைவியுடன் களிப்பு-எப்படியம்மா சீக்கிரம் வருவார்.

பத்மா : எனக்கு விஜயாவைக் காண வேண்டுமென்று ஆசை துடிக்கிறதடி ..

தோழி 2 : அம்மா யாரோ ஒரு துறவி, உங்களைப் பார்க்க வேண்டுமாம் அவசரமாக !

(துறவி வேடத்தில் பௌத்தாயனன் வருகிருன்)

பத்மா வணக்கம்...
துறவி : வாழிய நலம் மகாராணி . முதலில் இருதயத்தை இரும்பாக்கிக் கொள்.
பத்மா என்ன ?
துறவி : கரும்பல்ல நான் கூறப்போகும் செய்தி! உம் கடலில் துரும்பம்மா மனித வாழ்க்கை !
பத்மா : என்ன சாமி தொடர்பில்லாமல் பேசுகிறீர்கள்.
துறவி : தொடர்பற்றவன் தானே துறவி! உன் மகன் வெற்றி யடைந்த சேதிகேட்டு எவ்வளவு மகிழ்ந்திருப்பாய்.
பத்மா : ஆமாம் ஸ்வாமி !
துறவி : சந்தோஷத்தை அணைத்துக் கொள்ளும் அதே உள் ளம் சங்கடத்தை ஏன் சந்திக்க மறுக்கிறது ?
பத்மா : ஸ்வாமி ! என்ன நேர்ந்தது சொல்லுங்கள் !
துறவி : இதோ ! இந்த போர்வாள் சொல்லும்.
பத்மா : ஆ ..
துறவி : போய்விட்டான்உன்புதல்வன் புண்யலோகத்துக்கு.
பத்மா : ஆ...மனோகரா! 'வந்துவிட்டேனம்மா' என்ற குரல் கேட்டு தோழியின் மீதுசாய்ந்தவள்திடுக்கிட்டுகண்களை நம்பாமல் திரும்பிப் பார்க்கிருள் மனோகரா மனோகரனை தழுவி ஆச்சாரியத்துடன் பார்க்கிருள் !
மனோ : ஏனம்மா இப்படிப் பார்க்கிறீர்கள் என்ன நடந்தது ? யார் இந்த சாமியார்? (கையிலுள்ள போர்வாளை கண்டு) ஆ என் போர்வாள், காணமற் போனது எப்படி இங்கே வந்தது ?
பத்மா : மனோகரா ! நீ என்னைப் பிரிந்து விட்டதாக இந்தப் பாவி சொன்னன்.
ராஜ : திருட்டுப்பயல்! வாளைத் திருடியதுமல்லாமல் வாலை வேறு நீட்டுகிருனே ? தாடியைப் பார் தாடியை! (தாடி யைப் பிடிக்க தாடி கையுடன் வருகிறது)
மனோ : பௌத்தாயனன்.
ராஜா : சதியிலேபுதுஅத்யாயம்போர்வாளைதிருடிவந்துகாட் டினுல் மகாராணி இறந்து விடுவார்கள்,சரியானசூழ்ச்சி.
மனோ : தேளின் கொடுக்கே! யாருடைய திட்டமடா இது சொல்.
பத்மா : மனோகரா பாவம் அவனை விட்டுவிடு ..
மனோ : விடக்கூடாதம்மா, ராஜப்ரியா இவனை சிறையிலே பூட்டி வை !
பௌத் : எல்லாவற்றுக்கும் வசந்தசேனைதான் காரணம்!
மனோ : வசந்தசேனை! இனியும் அவளை உயிரோடு விடக் கூடாது ! (போகிருன்)

பத்மா : மனோகரா ! நில் எங்கே ஓடுகிறாய் ?
மனோ : அம்மா இன்னும் என்ன? உங்கள் சபதத்தை நிறை வேற்றி விட்ட பிறகு ?
பத்மா : சொல்லுகிறேன், முதலில் வாளை உறையில் போடு! மகாராஜாவுக்கோ வசந்தசேனைக்கோ என் அனுமதி யின்றி எந்த விதமான தீங்கும் செய்வதில்லையென்று ஆணையிடு —என் மேல் ஆணையிடு —
மனோ ! அம்மா!
பத்மா : தாயின்மேல் ஆணையிடு !
மனோ : அரசரை ஒன்றும் செய்வதில்லையம்மா.
பத்மா : கூடாது வசந்தசேனைக்கும் சேர்த்துத்தான் !
மனோ : வசந்தசேனை வட்டமிடும்கழுகு! வாய்பிளந்து நிற்கும் ஓநாய் ! நம்மை வளைத்துவிட்ட மலைப்பாம்பு. அவளுக்கு இரக்கம் ? முடியாது ! கூடாது !
பத்மா : உன்னிஷ்டம்....ஊரார் நகைக்கட்டும் தாய் சொற் கேளாத் தனயனென்று ! நாடு சிரிக்கட்டும்-அடங்காத மகனைப் பெற்ற அன்னையென்று....
மனோ : அய்யோ — அப்படியொன்றுமில்லையம்மா ...... இதோ ஆணையிட்டு விடுகிறேன்

0 0 0

வசந்தி : (அந்தப்புரம்) பௌத்தாயனன் ஒரு குட்டிச்சுவரு ! கோழைப்பயல் ! என்னை நிச்சயம் காட்டிக் கொடுத்து விடுவான். நான் தப்ப வேண்டுமானால் அவன் உயிரோடு இருக்கக்கூடாது
தோழி : பாவம் பௌத்நாயனன் !
வசந்தி : ஹூம் தேனை எடுக்க வேண்டுமானால் பல தேனீக் களை கொன்றுதான் ஆகவேண்டும். நான் சொன்னதை ஏற்பாடு செய்.

0 0 0

(சிறைச்சாலை வசந்தசேனையின் தோழி கையிலே ஒரு கலயத்தோடு ரகசியமாக சிறைக்காவலாளியோடுபேசுகிறாள் பின்னர் காவலாளி அந்தக் கலயத்தை எடுத்துச் சென்று பௌத்தாயனிடம் கொடுக்கிறான்)
பௌத் : கொடுக்கிற தெய்வம் கூரையை பிச்சுக்கிட்டுக் கொடுக்கும்! வாழ்க வசந்தசேனை (என்று மூட்டையை அவிழ்க்க படமெடுத்த பாம்பு வெளிவந்து கடித்து விடு கிறது....பௌத்தாயனன் சாகிறான்)

0 0 0

(பொழுது புலர்ந்தது பாட்டு)

(ரத்ன சிம்மாசனம் அவைக்கூடத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது. அதை வசந்தி பார்க்கிருள். விஜயா பத்மாவதியின் முன் வணங்குகிருள்.

வசந்தி : அந்தப்புறம்) உம், நாளை மனோகரனுக்கு வெற்றி விழா வரவேற்பு அப்போது நான் விதவையைப் போல் ஒரு மூலையில் !

அரசன் : (சங்கடத்துடன்) வசந்தி! இப்படியெல்லாம்பேசாதே சகல கௌரவத்தோடும் நீ சபைக்கு வரலாம்.

வசந்தி : வரலாமா ?

அர : உம் வரலாம்.

வசந்தி : உம் ... தயக்கம் பிறந்து விட்டது பாவம் ! நீங்கள் என்ன செய்வீர்கள்சபையோர்கள் அனுமதிக்கமாட்டார்கள். சக்கரவர்த்தியாயிருந்தாலென்னசாதாரணபிரஜைகளுக்கு பயப்பட வேண்டியவர்தானே தாங்கள் !

அர : இல்லை நீ வரலாம்.

வசந்தி : வரலாம்! எங்கே வந்தால் என்ன? எதிரிநாட்டிலே இருந்து வந்திருக்கிற. அந்த ரத்ன சிம்மாசனத்திலே அல்லும் பகலும் உங்கள் அன்பையே நினைத்து தவம் இருக்கும் இந்ததரித்திரம் பிடித்தவள் பட்டமகிஷிபோல பக்கத்திலே அமர முடியுமா என்ன? அவ்வளவுக்கு கொடுத்து வைத்த பாவியா நான் ?

அர : பக்கத்திலென்னபரமசிவனைபோலபலமிருந்தால்உன்னை என் தலையில்கூட வைத்துக்கொள்வேன்கங்கையைபோல

வசந்தி : அப்படியானல் நாளை தர்பாரில் !

(அவைக்கூடம் ''மனோகரன் வாழ்க!'' என்ற முழக்கம். அரசர் வசந்தசேனையுடன் நுழைகிருர்).

பிரதானி 1. வசந்தசேனைக்கு ராஜ விருதுகளா ? மன்னர் மயங்கித்தான் விட்டார்.

பிரதானி 2 : மயக்கத்தால், இந்த மறவர் பூமியின் மானத்தையே வாங்கி விட்டார்.

பிரதானி 3 : அவமானச் சின்னம் அவளோடு அரசர். அதுவும் அவைக்களத்தில்

பிரதான 4 : சத்தியசீலரே....என்ன இது ?

சத்ய : விண்மீன் இருக்க வேண்டிய இடத்தில் மின்மினி—

மனோகரன் வாழ்த்தொலிகளோடு நுழைகிருன். வசந்தசேனையை ரத்ன சிம்மாசனத்தில் பார்த்ததும் கொதிப்படைந்து 'ஆ' வென அலறுகிருன்.

ராஜப் : மனோகரா தாயின் கட்டளை !

வசந்தி : புதல்வா நினைவிருக்கிறதா? போரில் ஜெயித்த பிறகே வெற்றிமாலை அணிவேன் என்ருயே? இதோ என் கண்மணிக்கு நான் சூட்டும் வாகைமாலை.

மனோ : சீ வெற்றிமாலே! உன் கையால் (வாளை உருவுகிறான்)
சத்ய : மனோகரா ! தாயின் சொல் தட்டி விடாதே !
ராஜப் : ஆமாம் மனோகரா !

(ஆத்திரமடைந்த மனோகரன் ராஜப்ரியன் கன்னத்தில் அறைந்துவிட்டு வெளியேறுகிறான்)

0 0 0

மனோ : (பத்மாவதி அறை) அம்மா !
பத்மா : மனோகரா ! என்ன நடந்தது ?
மனோ : என்ன நடக்க வேண்டுமென்றுஎண்ணிஎன் கைகளை கட்டிப் போட்டீர்களோ அது நடந்தது. அம்மா! இப்படி பயங்கரமாகக் கட்டளை இடுவீர்கள் என்றுமுன்பேதெரிந்திருந்தால் முத்துவிஜயனைக் கொன்று படை வீரர்பலரின் உயிரைத்தந்து அந்தப்பாதகிஅமர்வதற்கு சிம்மாசனத்தைக் கொண்டு வந்திருக்க மாட்டேன். நீங்கள் அமர வேண்டிய சிம்மாசனத்தில் அவளா. அதற்காக ஒரு படையெடுப்பா ?
பத்மா : படையெடுப்பால்வந்தபயன்தானேஇந் தப்பைங்கிளி [விஜயாவை காட்டி] இதை நினைத்துஅதைமறந்துவிடு! மனோகரா!விஜயா உன் கணவனை சாந்தப்படுத்து.

0 0 0

வைத் : [வசந்தனுக்கு மருந்துகொடுத்து] உம்சாப்பிடணும்?
வசந்தன் : ஏய் வைத்யா ! இந்த மருந்துக்குபெயர் என்ன?
வைத் : சுயபுத்தி சூரணம்
வசந்தன் : இது எதிலே தயாரிக்கப்பட்டது ?
வைத் : திராட்சை, தேன், கற்கண்டு, சர்க்கரை இவைகளால் தயாரிக்கப்பட்டது.
வசந்தன் : அப்ப கசக்குமே ?
வைத் : ஊஹூம் கொஞ்சம் புளிக்கும் ஏன்னா ரெண்டு மிளகாயும் சேர்த்திருக்கிறேன்.
வசந்தன் : வைதியா எனக்கு என்ன வியாதிடா ?
வைத் : தீராத வியாதி.
வசந்தன் : உம் அதானே பாத்தேன். எல்லாரும் பைத்யம் பைத்யங்கறுங்களே விகடா! கேட்டியா – எனக்கு பைத்யம் ஒண்ணும் கிடையாது! தீராத வியாதி !

0 0 0

பெரியவர் : [குகையில்] இந்த அருப மருந்து தீர்வதற்குள் வெற்றி நிச்சயம்.
கோ : அருபமருந்து குறைந்துவிட்டதே. இன்னும்கொஞ்சம்
பெரிய : தேவையில்லை....இதோ....இன்றைக்கே சாகாத சஞ்சீவி கண்டு பிடித்து விடுவேன்.

கேசரி : (வசந்தசேனை சிலையைக் காட்டி) வசந்தசேனை அவள் இருதயத்தை எடுத்துப் பிழிந்து இந்த சிலைக்கு சி ப்பு வர்ணம் பூச வேண்டும் ! அவள் கண்களை
(ஒருவெடி சப்தம் குருநாதர் புகைசூழ கீழே விழுகிருர். தூக்கி வெளியே வருகிருன். உயிர் ஊசலாடுகிறது)
பெரிய : கேசரி வர்ம என்கடைசி வாழ்த்து அவசரப்படாதே. உன் லட்சயத்திற்கு மனோகரனை துணையாக்கிக்கொள் ! நான் நான்.... (சாகிருர்)
கேசரி: ஓய்வின்றி உழைத்தீர், ‧ லகிற்குஒருஅதிசயத்தைச் சொல்ல ! அரு மருந்து ..அந்தமுறையைக்கூட எனக்கு காட்டவில்லையே ஸ்வாமி! புதுமையைக் கண்டுபிடித்த வர்கள்எல்லாம்மற்றவர்க்குவெளியிடாமலேயேமறைந்து விட்டார்கள். அந்த வழியில் நீங்களும் நடந்து விட்டீர் கள். இந்த நாட்டுக்கே இப்படி ஒரு சாபமோ ?

0 0 0

(வசந்த விழா பாட்டு)

விஜ : இந்த அன்பு மாறவே மாருதே ?
மனோ : ‧து என்ன கேள்வி விஜயா !
விஜ : இல்லை நீங்களும் மாமாவைப்போல் ஒரு வசந்தசேனை யின் மயக்கத்தில் விழுந்து விட்டால் ?
மனோ : வசந்தசேனை! அவள் பெயரையே என்னிடம் உச் சரிக்காதே! என் தாயார் இருக்க வேண்டிய இடத்திலே அந்த நாய் தணலில் விழுந்த புழுவாக அவளைத் தவிக்க விட்டு என் தாயை கொலு மண்டபத்தில் அமர்த்தா விட்டால் நான் மனோகரனல்ல.
விஜ : ஆ !
மனோ : என்ன ?
வசந்தன் : (எழுந்து) காலை மிதிச்சுட்டியே அண்ணி !
மனோ : ஏ நீ இங்கேயே ஒளிந்து கொண்டிருந்தாய்.
வசந்தன் : உம் பொம்பளைங்க எல்லாம் தண்ணியாலையும் பூவாலையும், தண்ணிப் பூவாலையும், பூத்தண்ணியாலை யும், பூத்தண்ணியாலையும்தண்ணிப்பூவாலையும்அடிச்சா நீங்களும்தான் ஒளியுவிங்கு !
மனோ : (சிரிக்கிருன்) தைர்யசாலி (விஜயாவும் சிரிக்கிருள்)
வசந்தன் சிரிங்க ! சிரிங்க !
வசந்தி: (அரசனுடன் வந்து கொண்டே) வசந்தா! வசந்தா
வசந்தன் நான் இங்கே இருக்கேம்மா ! ஏம்மா அம்மா ! அண்ணனும் அண்ணியும்என்னைப்பார்த்துசிரிக்கிருங்க!
வசந்தி : பாண்டியன் மகளைக் பாணிக்கிரகணம்செய்ததுபற் றித்தான் ஊர் உன் அண்ணனைப் பார்த்து சிரிக்கிறது.

தகப்பனைக் கொன்றவனுக்கு தாரமாய் வாய்த்ததைப் பற்றித்தான் உலகமே உன் அண்ணியைப் பார்த்து சிரிக்கிறது. சிரிக்கிருர்களாம் சிரிப்பு . எல்லாம் சீரழித்து விடுகிறேன் ! வாடா நீ !

வசந்தன்: அதெல்லாம் உன்னால் முடியாதம்மா ! உன்னைபுழு மாதிரி தவிக்கவிடப் போவுது அண்ணன் ஜாக்கிரதை இப்பத்தான் அண்ணிகிட்ட சொன்னது. ஏன் அண்ணி !

வசந்தி : (கேலியாக) உம் வீராதி வீரர்களாலும் முடியாத காரியம். இந்த வேசிமகனால்தானா முடியப்போகிறது.

மனோ : ஆ ! என்ன சொன்னாய்? (கட்டாரியை உருவுகிருன்) நஞ்சு கக்கிய அந்த நாவைத் துண்டாடுகிறேன் பார்.

அரசன் : (தடுத்து) மனோகரா விடு !

மனோ : முடியாது நீர் உம் மனைவியின் மானத்தைக் காப் பாற்ருவிட்டாலும் நான் என் தாயாரின் மானத்தைகாப் பாற்றியே தீருவேன்.

அர : சொல்வதைக் கேள்.

மனோ : முடியாது உமக்கு வல்லமையிருந்தால் அவளைக் காப்பாற்றும்.

சந்யசீலா : மனோகரா !

விஜ : அத்தான் ! அத்தைக்குச் சொன்ன வாக்குறுதி !

மனோ : சீ [விஜயாவை அடிக்கிருன்] அம்மா ! (போகிருன்)

அரசன் : வசந்தி ! நீ வரம்பு மீறி விட்டாய்.

வசந்தி : ஸ்வாமி !

அரசன் : சீ பேசாதே !

0 0 0

மனோ : (பத்மாவதி அறை) அம்மா அம்மா அம்மா துள்ளி வரும் வேல் ஆவேசத்தை அள்ளிவரும் வாள் அவைகளை எல்லாம் தடுத்திருக்கிறேன். அவைகளைவிட பெரியவளா என்னை நகையாடியஇந்தகள்ளி? ஆனால் அவளைத்தான் எதிர்க்க முடியாமல் ஓடிவந்திருக்கிறேன். யாராலம்மா ? தங்களால் தங்கள் கட்டளையால்-சத்தியத்தால்.

பத்மா : மனோகரா விஷயத்தை சொல் ! என்ன நடந்தது ?

மனோ : தன்மானம் தரைமட்டமானது வீரம் விலை கூறப்பட் டது அவமானச்சின்னம் ஆணவத்தால்ஆடியது! அம்மா! தங்கள் கட்டளையை உடனே மாற்றிக்கொள்ளவேண்டும்

பத்மா : சத்தியம் செய்திருக்கிருய் செல்வா !

மனோ : வீரன் கோழையாவதா துடிக்கும்தோள்கள் துவண்டு போவதா? வேண்டாம் அந்தவிபரீதசத்தியத்தை நான் காப்பாற்ற வேண்டாம் [மனோகரன் போகிருன்]

பத்மா : (விஜயாவிடம்) என்ன நடந்தது விஜயா ?

விஜ : அந்தப் பாதகி வசந்தசேனை (விம்மி அழுகிருள்)
0 0 0

வசந்தி : (அரசர்அறைக்கதவைதட்டி)பிரபோவசந்திவந்திருக்கிறேன் பிரபோ (அரசர் மௌனமாக உலாவுகிருர்)
0 0 0

பத் : அப்படியாசொன்னுள்! அதைஅரசர்கேட்டுக்கொண்டு நின்ருர்.அப்போது சத்யசீலர் அங்கேஇருந்தாராவிஜயா

விஜ : இருந்தார்.

பத்: மனோகரனைத்தான்தாயின்ஆணைதடுத்ததுசத்யசீலரை எது தடுத்தது? அந்த கொடுமையை எதிர்த்துப் பேச முடியாமல் குரலிலே-நடுக்கம் ஏற்பட்டதா? அல்லது நெஞ்சிலே கோழைத்தனம் குடிகொண்டதா? (தோழியிடம்) கூப்பிடடி சத்யசீலரை. உடனே போ இப்போதே அழைத்துவா ! 0 0
(வசந்தசேனை முத்தாரத்திலிருக்கும் உக்ரசேனன் படத்தை பார்த்துக் கொண்டிருக்கிருள்)

தோ : என்னம்மா ஏன் இப்போது அதை ...

வசந்தி : நான்தான் சொல்லியிருக்கிறேனடி....ஆபத்தில் கை கொடுக்கும் கடவுள் இதுதானென்று.

தோ : அதன் உதவி இப்போது தேவையில்லை.

வசந்தி : அதிருக்கட்டும்...போன செய்தி.

தோ: மனோகரன்கோபாவேசமாய்இருக்கிருர். மகாராணியும் விஷயத்தைக் கேட்டு துடித்துப் போய்

வசந்தி : அடுக்காதே சீக்கிரம் சொல்.

தோ : சத்யசீலரை உடனே அழைத்துவரும்படி தோழியை அனுப்பியிருக்கிருர்கள்.

வசந்தி : இந்நேரத்திலா ?

தோ : ஆமாம்....

வசந்தி : இருட்டு வேளையிலா ?

தோ : ஆமாம்.

வசந்தி: பத்மாவதியின் அந்தப்புரத்திலேசத்யசீலர்வருகிருர் இரவு நேரத்தில்....

தோ : வசந்தவிழா சம்பவம் பற்றி விசாரிக்க.

வசந்தி : தெரியுமடிஎனக்கு ...அவர் ஏன் அழைக்கப்பட்டிருக்கிருர். அது தெரியும், அதைத்தான் திருப்பிவிட வேண்டும் இருட்டு வேளை பத்மாவதியின் அந்தப்புரம்! அங்கே சத்யசீலர்! அதை நேரே காணவேண்டும்! யார்?யாரடி? அரசர் காணும்படி நாம் செய்ய வேண்டும்....அதற்குஒரு வழி செய்ய வேண்டும் .. வா !
0 (அரசர் அறைக்கதவை தோழி தட்டுகிருள்) 0

தோ : மகாராஜா மகாராஜா ஆபத்து....கதவைத் திறங்க மகாராஜா காரியம் கெட்டுவிடும்....ஆபத்து மகாராஜா.
அரசர் : என்ன இது ?
தோ : மகாராஜா ! அய்யோ !
அர சொல்லு விஷயத்தை
தோ : வசந்தசேனையம்மா தூக்கு போட்டுக்கிட்டு—
அர : ஆ !
தோ : சாகப்போருங்க...சீக்கிரம் போனுத்தான் காப்பாத்தலாம்.
அர எங்கே ?
தோ : இந்தப்பக்கம்தான் போனுங்க....அய்யோ அம்மா
[ஓடுகிருர்கள். ஒருமரத்தடியில் வசந்தசேனை தூக்குப் போட எத்தனிப்பவள் போல் நிற்கிருள்]
வசந்தி : ஆண்டவனே அடியாளை உன் திருவடிகளிலே ஏற்றுக்கொள் அரசன்மீது நான் காட்டிய விஸ்வாசமெல்லாம் விழலுக்கிறைத்த நீராகி விட்டது. அவர்மேல் குற்றமில்லை. என் விதி, நான்தானே அனுபவிக்க வேண்டும்.
அர : சேனு ! சேனு? ஓடி வருகிருர் வசந்தி என்ன காரியம் செய்தாய்! இது என்ன பைத்தியக்காரத்தனம் ?
வசந்தி : இல்லை உண்மை காதலுக்குக் கிடைத்த பரிசு! மகாராஜா இனிநான் ஒரு க்ஷணமும் உயிரோடிருக்க விரும்பவில்லை உங்கள் கண்ணெதிரிலேயே கண்ணை மூடுகிறேன், அதுவே எனக்குப் பேரானந்தம் பிரபு !
அர : வசந்தி வேண்டாம்....
வசந்தி : விட்டு விடுங்கள் பிரபு !
அர வசந்தி . வேண்டாம் வா இங்கே !
வசந்தி : என்னை விட்டு விடுங்கள்... மகாராஜா மரண முகப்பிலே ஒரு வேண்டுகோள், தயவுசெய்து நிறைவேற்றுங்கள் தற்கொலை செய்துகொண்டாள் வசந்தாஎன்றஅவச்சொல் தங்களுக்கு வேண்டாம். தாங்களே கொன்று விடுங்கள். இதோ கட்டாரியை காட்டி தங்கள் நினைவுகளை ஏந்திக்கொண்டிருக்கும் என் நெஞ்சிலே இதைப் பாய்ச்சுங்கள். அதைக்கத்திக்குத்தாகக்கருதமாட்டேன் என்கண்ணாளன் தந்த கடைசி முத்தமாகக் கருதுவேன்
அர : வசந்தி உனக்கு என்ன புத்தி மாருட்டமா ?
வசந்தி : உங்கள் அன்பை இழந்த பிறகு நான் யாருக்காக வாழவேண்டும் ?
அர : வசந்தி ஏதோ கோபத்தில் சொல்லிவிட்டேன்!
தோழி : நல்ல கோபம் கொஞ்சம் தாமதித்திருந்தால் இந்நேரம் கொலை விழுந்திருக்கும் ஏமாற்றி வாழ்பவர்களெல்

லாம் இன்பலோகம் போகவேண்டும் நீங்கள் எமலோகம் நல்ல நியாயம் அம்மா இது ?

வசந்தி : சீ என்னடி தத்துவார்த்தம் பேசுகிறாய். மகாராஜா விடம் பேசுகிறோம் என்ற மரியாதைகூட இல்லாமல்

தோழி : மனங்கொதிக்குதம்மா ! மகாராணியும்....

அர : என்ன ?

வசந்தி : வாயை மூடு. போ இதை விட்டு !

தோழி : என்னை அடியுங்கள் கொல்லுங்கள் கவலையில்லை ! என்றைக்கு இருந்தாலும் உண்மை வெளிவரத்தான் போகிறது. பலநாள் திருடன் ஒருநாள்

வசந்தி : மாலினி நீ போக மாட்டாய் !

தோழி : முடியாது ! வந்து பாருங்கள், மகாராணி அந்தப் புரத்தை! அர்த்த ராத்திரியிலே அங்கே சத்யசீலருக்கு என்ன வேலை ?

வசந்தி : அய்யோ ! அய்யோ !

அரசர் : ஆ....! அப்படியா....உண்மையாகவா? ஓடுகிறார்)

(வசந்தியும், தோழியும் சிரிக்கின்றனர்).

0 0 0

பத்மாவதி: (பத்மா அறை) அமைச்சரே மகாராஜாவையே கேளுங்கள் ? என்ன சொல்கிறாரென்று!

சத் : மகாராஜா இதையெல்லாம் கவனிக்கவே மாட்டார்!

பத்மா : மனோகரனை நினைத்தால் எனக்கு பயமாயிருக்கிறது.

சத் : பயப்படத் தேவையில்லை. நான் பார்த்துக்கொள்கிறேன்.

(அரசனும் வசந்தசேனையும் ஒட்டுக்கேட்கின்றனர்)

வசந்தி : மகாராஜா கவனிக்கமாட்டார் மனோகரனுக்குப்பயப் படத்தேவையில்லை. அரசர்பத்மாமீது சந்தேகப்படுகிறார்)

அர : (தனிமையில் நிலவைப் பார்த்தபடி களங்கம் களங்கம் என் பரம்பரையிலேயே இல்லாத களங்கம் பாதகி பக்கத்திலிருந்த பத்மாவின்சிலையைஉடைத்தெறிகிறார்)

வசந்தி : ப்ரபு ! அமைதியாக இருங்கள்

அர : அமைதி! அவளுடைய சாவிலேதான் எனக்கு அமைதி!

வசந்தி : இதைக்கேளுங்கள் மகாராஜா ! மகாராணி...

அர : மகாராணி மறுபடியும் சொல்லாதே !மானமிழந்தவள் நாடோடி வேசி ! வசந்தி ! நீயே உத்திரவிடு ! அவளை பாதாள சிறையில் போட வேண்டும்.

வசந்தி: ராணியை சிறையில் போடுவதால்உங்கள் ஆத்திரம் அடங்கும். வசந்த விழாவில் தாயைக்குறை கூறினேன் என்று தாண்டி விழுந்தானே, மனோகரன் ! அப்போது என்ன சொல்கிறான்? மன்னிப்பு கேட்டுக் கொள்ளுவானா என்னிடம்....

அர : கேட்கச் சொல்லுகிறேன்....உன்னை எதிர்த்துப் பேசியதற்கு கொலுமண்டபத்திலேயே மன்னிப்பு கேட்கசொல்லுகிறேன். பத்மாவதிக்குச் சிறைச்சாலை ! மனோகரன் வசந்தசேனையிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் ...

0 0 0

மனோ : (பத்மாவதி அறை) மாதா சிறை செல்ல வேண்டும்.... மனோகரன் மன்னிப்பு கேட்க வேண்டும் !

ராஜ : அதுவும் கொலு மண்டபத்தில்; அந்த குப்பைமேட்டுக் கோட்டானிடம் !

மனோ : ஆணையிடுவது தந்தை !

பத் : ஆமாம் கண்ணே ! அதை மறந்து விடாதே, உன்னைப் பெற்ற தந்தை.

ராஜ : தந்தை....அஞ்சா நெஞ்சனைமகனைப் பெற்றார் ... அருங்குணவதியை மனைவியாக பெற்றார் அவர் பெற மறந்தது ஒன்றுண்டு தாயே! அறிவு! அறிவு! அதைத்தான் பெற மறந்தார் !

மனோ : மறந்ததை நினைவூட்டுகிறேன்...

பத் : உன்னால் முடியாது என்று சொல்கிறேன் தங்கமே! அவசரத்தில் அப்பா தவறியிருக்கலாம்....எதற்கும் நீ போய் காரணம் கேள் !

மனோ : காரணம் கேட்பதா ?

விஜ : அத்தே வேண்டாம் ...அவரை அனுப்பாதீர்கள் வேண்டாம் அத்தே அனுப்பாதீர்கள் வேண்டாம் அத்தே... அத்தான் நீங்கள் போக வேண்டாம்.

பத் : வீர மகனே போய்வா !

விஜ : வேண்டாம் அத்தே !

பத் ; விஜயா !

மனோ : போய் வருகிறேன் சிப்பாய்களை நோக்கி) ஜாக்ரதை! நான் திரும்பும் வரையில் நெருங்கக்கூடாது என் அன்னையிடம் ! விஜயா, பார்த்துக்கொள் ! வருகிறேன்.

0 0 0

ராஜ : (அவைக்கூடம்) புயல் வீசப்போகிறது மன்னவரே ! புழுதி மேடாகப் போகிறது இந்த அரண்மனை !

அர : ராஜப்பிரியா ?

ராஜ : அரசர் விடுத்த அவசர ஆணைகேட்டு அடலேறுபோல வந்து கொண்டிருக்கிறான் மனோகரன்.

அர : ஆ !...

ராஜ: அமைதியாகத்தான் வருகிறான். ஆனால் எரிமலை குமுறுவதற்கு முன் எச்சரிக்கை செய்வதில்லை, மகாராணிக்கு சிறைச்சாலை, மனோகரன் மன்னிப்பு கேட்க வேண்டும்.

வேந்தே, வேங்கையிடம் விஷமம் காட்டலாமா? வீரன் சினந்தால் விபரீதம் ஏற்படும்! திரும்ப பெறுங்கள் உத்திரவை! இல்லையேல் தீப்பொறி கிளம்பும்! தீப்பொறி கிளம்பும்! (வசந்தி நடுங்குதல்)

அர : பயப்படாதே! பார்க்கிறேன், அந்த தீப்பொறியை அவனை இரும்பு சங்கலியால் பிணைத்து அழைத்து வாருங்கள்

0 0

சிப் : (மனோகரனிடம்) மன்னரின் ஆணை இந்த சங்கிலியால் பிணைத்து தங்களை சபைக்கு அழைத்து வரவேண்டும்.

மனோ விலங்கா?

பத்மா : விலங்கா! விபரீதம்தான் தோழியிடம் எடு என் மேலங்கியை ஓடி வருகிருள்)

சத் : மனோகரா! நீ சபைக்கு செல்வது காரணம் கேட்க. அதற்குளப்படிச் சென்ருல் என்ன? விலங்கு கைகளுக்கே தவிர வாய்க்கு அல்லவே! (விலங்குடன மனோகரன் இழுத்து வரப்படுதல்)

0 0 0

அரசர் : மனோகரா! உன்னை எதற்காக அழைத்திருக்கிறேன் தெரியுமா?

மனோ : திருத்திக்கொள்ளுங்கள் தயவு செய்து, அழைத்துவரவில்லை இழுத்துவரச் செய்திருக்கிறீர்கள்.

அர : என் கட்டளையை தெரிந்து கொண்டிருப்பாய் நீ!

மனோ : கட்டளையா இது? கரைகாண முடியாத ஆசை! பொன்னும், மணியும், மின்னும் வைரமும் பூட்டி மகிழ்ந்து, கண்ணே! முத்தே! தமிழ்ப்பண்ணே! என்றெல்லாம் குலவிக்கொஞ்சி, தந்தத்தால் ஆன கட்டிலிலே சந்தனத் தொட்டிலே வீரனே! என் விழி நிறைந்தவனே! தீரர் வழி வந்தவனே! என்று யாரைச் சீராட்டி பாராட்டினீர்களோ அவனை அந்த மனோகரனை சங்கிலியால் பிணைத்து சபை நடுவே நிறுத்தி சந்தோஷம் கொண்டாட வேண்டும் என்ற தங்கள் தணியாத ஆசைக்குப் பெயர் கட்டளையோ தந்தையே?

சபையோர் : த்ச் த்ச

அரச : நீ நீதியின் முன்னே நிற்கும் குற்றவாளி, தந்தையின் முன் நிற்கும் தனயனல்ல இப்போது!

மனோ : குற்றவாளி! ஹும் யாருக்குஎன்ன தீங்கிழைத்தேன்? என்னால் பாதிக்கப்பட்டவர்கள் யார்? அரசே தந்தையின் முன் தனயனுக அல்ல, பிரஜைகளில் ஒருவனுகவே கேட்கிறேன். கொலை செய்தேனு? கொள்ளையடித்தேனு? நாட்டைக் கவிழ்க்கும் குள்ளநரி வேலைதான் செய்தேனு?

குற்றம் என்ன செய்தேன், கொற்றவனே குற்றம் என்ன செய்தேன்? கூறமட்டீர்களா? தாங்கள் கூறவேண்டாம் இதோ அறங்கூறும் அமைச்சர்கள் இருக்கிறார்கள். மறவர் குடிபிறந்த மாவீரர்கள் இருக்கிறார்கள். மக்களின் பிரதிநிதிகள் இந்த நாட்டில் குரல்கள் இருக்கிறார்கள். அவர்கள் கூறட்டும் என்ன குற்றம் செய்தேன்?

சபையோர்: குற்றத்தை மகாராஜா கூறத்தான வேண்டும்.

அரச: இது உங்களுக்கு சம்பந்தம் இல்லாதது.

மனோ: சம்பந்தம இல்லாதது சபைக்குவருவானேன் குடும்ப தகராறு கொலு மண்டபத்துக்கு வரும் விசித்திரத்தைச் சரித்திரம் இன்றுதான் முதன் முதலாக சந்திக்கிறது மகாராஜா!

அர: போதும் நிறுத்து வசந்த விழாவில் நீ செய்த தவறுக்காக வசந்தசேனையிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

மனோ அதற்கு காரணம் கேட்கிறேன்!

அரசர்: எதிர்த்து பேசுகிறவர்களுக்கு ராஜசபையில் என்ன தண்டனை தெரியுமா?

மனோ: முறைபபடிமணந்தராணிக்குசிறைதண்டனை அளித்துவிட்டு, மூலையில் கிடந்தவளுக்கு முடிசூட்டியவர்களுக்கு அளிக்கப்படும் தண்டனையைவிட குறைவானதுதான்.

அரசன்: ஆத்திரத்தை கிளப்பாதே! நிறைவேற்று, அரசன் உத்தரவு.

மனோ: அரசன் உத்தரவென்ன? ஆண்டவனின் உத்திரவுக்கே காரணம்கேட்கஆரம்பித்துவிட்டார்கள் அரசே! சிறைசாலைக்குச் செல்ல வேண்டும் தாய் என்ற கேள்வி பட்டபின்னும் அடங்கிக் கிடப்பவன் ஆமை!

அரசர் தாய்க்கும் தந்தைக்கும் வேற்றுமைஅறியாமூடனே! தந்தையின் ஆணைமேட்டு தாயாரின தலையை வெட்டி எறிந்த பரசுராமனைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறாயா நீ?

மனோ: பரசுராமன் அவதாரம மனோகரன் மனிதன்!

அர. என் உத்தரவை நிறைவேற்றப்போகிறாயா இல்லையா?

மனோ நிறைவேற்றுகிறேன், மன்னிப்பு கேட்க வேண்டும்... மனோகரன்.

அரசர்: ஆமாம்; அதுவும் அரை நொடியில்.

மனோ: அரைநொடியென்ன? அதற்குள்ளாகவே! ஆறுல்யாரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் தெரியுமா? கோமளவல்லி! கோமேதகச் சிலை! கூவும் குயில்! குதிக்கும் மான்! என்றெல்லாம் உம்மால் புகழ்ப்படும் இந்த வாணல் புத்திக் காரியின் கொள்ளிக்கண்களை-நெடிய நாக்கை-என் கூர்வாளுக்கு இரையாகத்தந்துவிட்டுஅதைஎதிர்த்தால்

உம்மையும் உமக்கு பக்க துணைவந்தால் அந்த பட்டாளத்தையும் பிணமாக்கிவிட்டு சூன்யக்காரிக்கு ஆலவட்டம் சுற்றுபவர்களை சுடுகாட்டுக்கனுப்பிவிட்டேன் என்று சுழலும் வாளுடன் சூழும் புகழுடன் என் அன்னையிடம் ஓடி மன்னிப்பு கேட்க வேண்டும். நிறைவேற்றட்டுமா அந்த உத்தரவை? தயார்தானு தயார்தானு ஏன் நடுங்க வேண்டும். ஹ ஹ ஹ புருஷோத்தமன் போரிலே புலி வாள் எடுத்தால் வையகம் கலங்கும்—அவரா இப்படி பயப்படுகிருர்? பாவம், வேலின் கூர்மையை சோதித்த விரல்கள வஞ்சகியின் விரலை அல்லவா ரசித்துக்கொண்டிருக்கின்றன. பாசறையைப் பார்வையிட்ட கண்கள் இந்தப் பாப்பாட்டத்தின் பாவத்தில் அல்லவா லயித்துக் கிடக்கின்றன கோட்டை கொத்தளங்களை நினைத்துகிடந்த நெஞ்சம், இந்தக்குட்டிச்சுவரின் நிழலில் அல்லவா குளிர்ச்சி காணுகிறது?

அர: பேசாதே!

மனோ: ஊர் பேசுகிறது....உலகம் பேசுகிறது!

அர: ஆமாம்! நீ வேசி மகன் என்று

மனோ: ஆ!

அர: ஏன் கேட்பதற்கு தித்திக்கிறதோ? ஆயிரம் முறை சொல்வேன், நீ வேசி மகன்!

மனோ: ஹா அம்மா, போதும் உம் பேச்சு, இதோ! அந்த வாயை சுக்கு நூருக கழிக்கிறேன் சங்கிலி அறுபடுதல்)

சத்ய: மனோகரா...!

மனோ: யாரும் குறுக்கிடாதீர்கள். மனோகரனின் ஆத்திரம் நல்லவர் கெட்டவர் என்றுகூட பார்க்காது. விடும் என்னை எடும் கையை, புருஷோத்தமரே! புரட்டுக்காரியின் உருட்டும் விழியில் உலகத்தைக் காண்பவரே! மானமொன்றே நல்வாழ்வென கொண்டு வாழ்ந்த மறவேந்தர் பரம்பரையில் மாசாக வந்தவரே! மயிலுக்கும் மந்திக்கும் வித்தியாசம் தெரியாத மதிவாணரே! குளிர் நிலவைக் கொள்ளிக் கட்டையெனக் கூறிய குருடரே; என் தாய் அன்பின் பிறப்பி ம் அறநெறியின்-இருப்பிடம்-கருணை வடிவம் கற்பின் திருவுருவம் மாசற்ற மாணிக்கம மாற்றுக் குறையா தங்கம் அவர்களை அவதூறு கூறிய உமது அங்கங்களை பிளந்தெறிவேன்! இந்த துரோக பேச்சுக்கு உம்மை தூண்டிவிட்ட துர்க்கையின் உடலைத்துண்டாடுவேன் துணிவிருந்தால் தோளிலே வலுவிருந்தால் எடுத்துக் கொள்ளும் உமது வாளை—தடுத்துக்கொள்ளும் உமது

சாவை! தைரியமில்லாவிட்டால் தளுக்குக்காரியின் குலுக்குச் சிரிப்பிலே நீர் கோழையாகி விட்டிருந்தால் ஓடிவிடும் இதைவிட்டு! புறமுதுகு காட்டி ஓடும்! புறநானூற்றின் பெருமையை மூடவந்த புழுதிக்காற்றே! புறமுதுகு காட்டி ஓடும்! கலிங்கத்து பரணியை மறைக்க வந்த காரிருளே! கால்பிடரியில் இடிபட ஓடும்...ஓடும்...ஓடும்... ஓலமிட்டு ஓடும் ஓங்காரக் கூச்சலிட்டு ஓடும். ஏன் அவமானமாயிருக்கிறதா? என் அன்னையைத் தூஷித்த சின்னஞ்சிறு புழுவே ஏன் சிலையாக மாறிவிட்டீர்? ஏ ராஜ் விகரகமே; பழி வாங்கும் பக்தன் பூஜை செய்ய வந்திருக்கிறன்! அப்படியே நில்லும் அசையாமல் நில்லும்! இந்த சித்து வேலைக்காரியின் ரத்தத்தை கொண்டு உமக்கு அபிஷேகம் செய்விக்கிறேன் இந்த நாசகாரியின் நரம்புகளால் உமக்கு மாலைசூட்டுகிறேன் முல்லைச் சிரிப்பென புகழ்வீரே, மோகபோதையில் அந்தப் பல்லையெடுத்து உம்மை அர்ச்சனை செய்கிறேன். பாவி பார்.... பத்தினியை இகழ்ந்த படுபாவி பார்! நீயும் உன் பஞ்சணை ராணியும் படும் பாட்டைப் பார்!

பத் : (வந்து கொண்டே) விடு வாளை!

மனோ : யார் நீ (திகைத்தபடி) அம்மா! அம்மா! நீங்கள் எங்கே அம்மா வந்தீர்கள்? கயமைத்தனம் ஆட்சி புரியும் இந்த இடத்திலே உங்கள் தூய்மையான காலடிகள் படக்கூடாதே அம்மா!

பத் : மனோகரா!

மனோ : சற்று பொறுங்கள் தாயே! அரசரை பார்த்து) எங்கே ஓடப் பார்க்கிறீர்கள்? நில்லுங்கள்.

பத் : மனோகரா! உன்னையும் மறந்து விடாதே!

மனோ : அம்மா சற்றுமுன் இந்தக் கொலுமண்டபத்திலே தங்களைப்பற்றி ஒலித்த கொடிய வார்த்தைகளை தாங்கள் கேட்டிருந்தால் இப்படி சொல்ல மாட்டீர்கள். இருங்கள் வருகிறேன். (வாளை உருவுகிறன். பத்மாவதி தடுக்க அது அவள் கையைக் கிழிக்கிறது.)

மனோ : அம்மா பாதகமில்லை. உங்கள் புனிதப் பொற்கரத்திலிருந்து சொட்டும் ஒவ்வொரு துளி ரத்தத்திற்கும் இந்தப் பொல்லாதவர்கள் பதில் சொல்லியே ஆகவேண்டும்!

பத் : மனோகரா! என்னைத்தானே இகழ்ந்தார்கள்?

மானு : விடுங்கள்! தாயை இகழ்ந்தவனை, என் தாய் தடுத்தாலும் விடேன்.

பத் : மனோகரா! நீ என் மகன் என்பது உண்மையானல் சொல்வதை கேள்.

மனோ : அம்மா—

பத் : முதலில் நீ வளர்ந்த இந்த வயிற்றிலே வாளைப்பாய்ச்சி விட்டு பிறகு மகாராஜாவிடம் போ! தாயின் பிணத்தின் மேல் நின்று கொண்டு தந்தையிடம் போரிடு ...உம் இதோ உன் தாய் கொலி என்னை....பிறகு உன் கொள்கை படி நட ஏன் நிற்கிறுய் ?

மனே : அம்மா !....

பத் : இனி நான் பேசிக்கொண்டிருக்கப் போவதில்லை. யாரை நாளுக வந்து பார்க்க மாட்டேன் என்று சத்தியம் செய்திருந்தேனே, அவரை உன்னுல் பார்க்க நேர்ந்ததும், சபையில் இப்படி பெற்ற மகனிடம் பிச்சை கேட்பதும் சகிக்க முடியாத அவமானம் !

மனே : இப்போது என்னம்மா செய்யச் சொல்கிறீர்கள் ?

பத் : வாளை இப்படிக்கொடு

மனே : மன்னிப்பு கேட்கட்டுமா ?

பத் : மனேகரா! என் மாணிக்கமே! உன் மாதா கோழையின் குடும்பத்தில் பிறக்கவும் இல்லை. கோழையின் மனைவியாக ஆகவும் இல்லை கோழையை மகனுக பெறவும் இல்லையடா கண்ணே! மன்னிப்பு கேட்பதைவிட மரணமடைவதே மேல்.

அர : ஆமாம் அதுதான் என் முடிவும் இத்த கொடியவனை உயிரோடு விடக்கூடாது : மனேகரனுக்கு மரண தண்டனை.

மனே : ஹா அம்மா...! இப்போதாவது அனுமதி கொடுங்களம்மா இந்த நீசர்களைக் கசக்கி எறிந்து விடுகிறேன். இன்னுமா அம்மா பொறுமை !

பத் : இப்போதுதான் பொறுமை.

மனே : அப்படியாளுல் நான் ?

பத் : சாகத்தான் வேண்டும்.

மனே : நாளு சாகவேண்டும்? உங்கள் மகன் மனேகரனு சாக வேண்டும் ?

பத் : ஆமாம்! யாருக்கும் கிடைக்கமுடியாத பாக்கியம். தந்தையே மகனைக்கொல்வது! அதற்கு தாயாரும் தலையசைப்பது தங்கமே. இந்த தரணியிலே யாருக்கடா கிடைக்கும் இந்த ராஜபாக்கியம்! போ மகனே, சாகப் போ!

மனே : அம்மா! நீங்களா இப்படி சொல்கிறீர்கள் !

பத் : ஆம்! உன்னை ஈன்ற தாய் ! நானே சொல்கிறேன் ! இறந்துவிடு !

மனே : அம்மா உங்களைப் பிரிந்தா ?

பத் : நான் உன்னைப் பிரிய துணிந்து விட்டேன்.

மனே : அம்மா ! அம்மா! : (மயக்கத்தோடு சாய்கிருன்)

சபையோர் : இளவரசனை விடுதலை செய்யுங்கள்.

சபையோர் : அநீதியான தீர்ப்பு.
சபையோர் : அநீதியான தீர்ப்பு! அநீதியான தீர்ப்பு.
பத்: அமைதியாயிருங்கள்! சத்யசீலரே! மனோகரனை தூக்கிக் கொண்டுபோக ஏற்பாடு செய்யுங்கள்-கொலைகளத்திற்கு
சபை : கூடாது! தீர்ப்பு அக்ரமம் அக்ரமம்!
பத் : யாரும் பேசாதீர்கள்என் மகன்-அவனைஎன் இஷ்டப்படி நடத்துவேன்! மரணதண்டனை நிறைவேறிய பிறகு சவ அடக்கம்கூட இந்த சாம்ராஜ்யத்துக்கு வெளியில்தான் நடைபெற வேண்டும்! (மனோகரன் கையை எடுத்து) செல்வா! இதுவே என் கடைசி முத்தமாயிருந்தால் அடுத்தபடி நம் கல்லறைகள் சந்திக்கட்டும்! (போகிறான்)

0 0 0

விஜயா : (அரசனின் காலில் விழுந்து) மாமா...மலர்ந்திருந்த ரோஜாவின் இதழ்களை ஏன் மாமா பியத்தெறிந்தீர்கள்... படர்ந்திருந்த மல்லிகையின் பச்சைக்கிளையைஏன்மாமா வெட்டிவிட்டீர்கள்...தொடர்ந்துவந்த்தன் தூயநற்காதலால் துன்ப அலைகளிலே ஏன் மாமா தள்ளிவிட்டீர்கள் ...சொல்லுங்கள் மாமா? இனி என் வாழ்வு பாலைவனந்தானா?...என் இருதயம் இருட்டறைதானா? விமோசனமே கிடையாதா மாமா?
அர: தீர்ந்துபோன விஷயம் திரும்பக் கிளறுவதில் பயனில்லை
விஜ: எது மாமா தீர்ந்துபோன விஷயம். தந்தை-மகன் என்ற பந்தமா? கணவன் மனைவி என்ற சொந்தமா? தங்களைப் பொறுத்தவரையில்இரண்டுமேதீர்ந்துவிட்டாலும், என் நிலையிலேயிருந்து நினைத்துப் பாருங்கள்; நான் உங்கள் பகைவரின் மகள். என் உள்ளத்தைக்கவர்ந்தஉத்தமர் உங்கள் மகன். எதிரியையும் இழுக்கக்கூடிய இதயம் படைத்தவரை இத்தகைய கொடுமைக்கு ஆளாக்குவது. அதுவும் தந்தையே செய்வது விந்தையல்லவா, மாமா? பாண்டியநாட்டு ராஜகுமாரி சோழநாட்டு அரண்மனைக்கு ஏன் வந்தாள்....சோகப் பதுமையாக மாறவா? சுகத்தை இழக்கவா? சொல்லுங்கள் மாமா.
வசந்தி : மாமியார் பாடம் அப்படியே மருமகளுக்கு!
விஜ : என் மாமாவோடு பேசுகிறேன்...
வசந்தி: மாமா உனக்கு மகாராஜா மாமா...அந்த சந்தேகத்தில் வந்தது தாண்டி இவ்வளவு சங்கடமும்.
விஜ: சீ பேசாதே வேசி
வசந்தி: என்ன சொன்னாய் வேசியின் மகனுக்கு மனைவியாக வாய்த்த வேசி —என்ன சொன்னாய்.
விஜ : ஆ—வசந்தசேனை — (கட்டாரியை வீசுகிறாள்)

வசந்தி: கற்புக்கரசிகளை கட்டாரி மட்டுமில்லை...கடவுளேகூட நெருங்க முடியாது !

அர : வசந்தி! (விஜயனைப் பார்த்து) பாவி.... என் ஆசைகளை அரை நொடியில் அழித்துவிடப் பார்த்தாயே...

வசந்தி: சதி நடக்கிறது மகாராஜா என்னை சாய்க்க !

அர : பயப்படாதே சதிக்கு முடிவு கட்டுகிறேன்...யாரங்கே ! (காவலாளியிடம்) பத்மாவதியுடன், விஜயாவையும் பாதாள சிறையிலே அடையுங்கள் உம் நடக்கட்டும்...

விஜ: மாமா.

0 0 0

மயக்கமுற்ற நிலையில் மனோகரன் ரதத்தில் எடுத்து செல்லப்படுகிறான். சத்யசீலரும் காவலாளிகளுடன் பின் தொடர அரூபம் ரதத்தைத் தடுத்து நிறுத்துகிறது. காவலாளிகள் பயந்து ஓட அரூபம் ரதத்தை ஓட்டிச் செல்கிறது. ராஜப்பிரியன் பின் தொடர்கிறான்.

காவ : (அரண்மனை மகாராஜா ! இளவரசர் தப்பிவிட்டார் !

அர : என்ன ?

வசந்தி : ஆ ! மனோகரன் தப்பிவிட்டானா ?

காவ : ஆமாங்க யாரோ கட்டுக்களை அவிழ்த்து காப்பாற்றினார்கள். கண்ணுக்கே தெரியவில்லை.

வசந்தி : விபரீதம் வளர ஆரம்பித்துவிட்டது பிரபு ! நகர் முழுவதும் சோதனை போடுங்கள், அந்த நாசகாரன் எங்கிருந்தாலும் பிடித்து வாருங்கள்.

அர : உம்....போங்கள்...

0 0 0

மனோ : (குகையில் மயக்கம் தெளிந்து முடியாதம்மா...முடியாது! என்ன இது ..கொல்லப்பட்ட நான் உயிரோடு...

கேசரிவர்மன் : இளவரசே !

மனோ : யார் நீ நீ யார் சத்யசீலரே ! யார் இவன் ?

சத்ய : விபரம் பிறகு சொல்கிறேன்...அவன்தான் உன்னைக் காப்பாற்றியவன்.

மனோ : என்னைக்காப்பாற்றுவது-மனோகரனைக்காப்பாற்றுவது மன்னன் ஆசை மாதாவின் அன்புக்கட்டளை-இவைகளை உடன் நிறைவேற்றுங்கள்—கொல்லுங்கள் என்னை கொல்லுங்கள். கொல்லுங்கள் ராஜப்ரியா! என் அன்பு தோழா என் அன்னையின் கட்டளையை நீயாவது நிறைவேற்று.

சத்ய : பொறு மனோகரா !

ராஜா: மனோகரா—தாய் சொல் தவறக்கூடாது என்பதற்காக சிறை வாசத்திலிருக்கும் தாயை அநாதையாகச் சாக விடுவதா ?

மனோ : ஆ ! அம்மா சிறையில்....
ராஜப் : அம்மா மட்டுமல்ல....விஜயாகூட
மனோ : ஆ....
ராஜ : இப்போதாவது தெரிந்துகொள்....நீ வாழவேண்டிய அவசியத்தை.
விஜ : (சிறைச்சாலை) வாள் முனையால் தன்னுயிரையும், மன்னுயிரையும் காத்திடும் வலிமை வாய்ந்தவர் கடைசியில் தப்பி ஓடி உயிர் பிழைத்தார் எல்லாம் உங்கள் நல்லெண்ணத்தால் வந்த நாசந்தான் அத்தே! அவர் எங்கு சென்றாரோ ? எப்படி அலைகிறாரோ !
பத் : சாப்பிடு விஜயா....
விஜ : வேண்டாம் அத்தே !
பத் : கர்ப்பவதி சாப்பிடாமல் இருக்கக்கூடாது. வயிற்றில் வளரும் கருவுக்காகவாவது சாப்பிட்டுத்தானே ஆக வேண்டும் ...சாப்பிடு....
விஜ : அத்தே....இந்தக் கஞ்சியா....

0 0 0

வசந்தி : அருமையாயிருக்கிறது...
தோ : இந்தப் பழரசம் உடம்பைப் பளபளப்பாக்கும்....
வசந்தி: தெரிந்துதானடி இதை தேர்ந்தெடுத்தேன்மாலினி! எங்கேயோ ஒரு அழகி இருந்தாளாம் ; அவள் மேனியின் பெருகு குலையாமலிருக்க கழுதைப்பாலிலே ஸ்நானம் செய்தாளாம்
தோ இதென்னம்மா அதிசயம் நீங்கள் கேட்டால் புருஷோத்தமர் புலிப்பால்கூட கொண்டு வருவாரே....
வசந்தி : சந்தேகமென்னடி அதிலே
தோ : அதிருக்கட்டும் ..இப்படி நீங்கள் அலட்சியமாகஇருக்கிறீர்களே . மனோகரன் வேறு தப்பிவிட்டான். வசந்தன் முடிசூட்டு விழாவை சீக்கிரம் நடத்திட வேண்டாமா ?
வசந்தி : இது என்னடி பெரிய காரியம் வேந்தனின் வேதபுத்தகமே நான்தான். வெண்ணிலாவை சூரியன் என்றால் அவர் நம்பித்தான் தீருவார் . கவலைப்படாதே! ஒருகண்ணசைவில் முடிந்துவிடும் வசந்தனின் பட்டாபிஷேகம்.

0 0 0

(வசந்தியின் உத்தரவுப்படி வசந்தனுக்கும், மாலினுக்கும் முடிசூட்டு ஒத்திகை நடத்துகிறான் வைத்தியன்)

0 0 0

வசந்தி : (நந்தவனம்) வந்து விட்டீர்களா ஸ்வாமி, நான் சோலைப் பாதையில் காத்துக்கிடந்தேன்...தாங்கள் மாளிகை வழியே வந்திருக்கிறீர்கள்.

அர : வழி எதுவானுல் என்ன உன் மொழியிலே, தேன்விழி யிலே ஒளி மாறி விடுகிறதா வசந்தி!

வசந்தி : எப்படி மாறும் இந்திரனுக்காகப் படைக்கப்பட்ட அகல்யா - சந்திரனுக்காகப் படைக்கப்பட்ட தாரை-புரு ஷோத்தமருக்காகப் படைக்கப்பட்ட வசந்தா.

அர : வசந்தி! கண்ணே....உன்னேடு என்ன பேசுவதென்றே தெரியவில்லை ..

வசந்தி : ஊமையாகவே இருங்கள்—அந்த ஒய்யாரத்தை நான் ரசிக்கிறேன்.

அர : இப்போது நீ எது கேட்டாலும் கொடுப்பேன்.

வசந்தி: வந்தது ஆபத்து! ...நான் கேட்பதாகநினைத்ததைக் கூட இப்போது கேட்கப் போவதில்லை !

அர : ஏன் வசந்தி!...

வசந்தி : சமயம் பார்த்து கேட்கிருள் சாகசக்காரி என்பீர்கள் நானென்ன தசரதனை ஏமாற்றிய கைகேயியா?....வேண் டாம் வேண்டாம்....

அர : என்ன வசந்தி கேள்!....

வசந்தி : வேண்டாம் ஹீம் !

அர : சரி நான் போகிறேன்.

வசந்தி : அய்யோ ! என் உயிர் போய்விடும். உட்காருங்கள்

அர : பிறகு....சொல்லேன் ...

வசந்தி இல்லை இளவரசன் இல்லாதநாடு...எழிலில்லாத ஓவியம் போலத்தானே!...

அர : அதற்கென்ன செய்வது ..

வசத்தி : ஏன், வசந்தனை இளவரசனுக்கி விட்டால்....

அர பைத்தியம் ! வசந்தனைவிட நீ பெரிய பைத்தியம்!...

வசந்தி : ஸ்வாமி!...

அர : அவனை இளவரசனுக்கக் கூடாது! - பைத்தியக்காரர் களுக்குத் தலைவனுக பட்டம்கட்ட வேண்டும்.அவனுக்கு முடிசூட்டினுல்! முதலில் நீ பைத்தியம் பிறகுநான் பைத் யம் அப்புறம் இந்த நாடே பைத்தியம்! ..

வசந்தி : போதும் போதும் !.... வர்ணிக்காதீர்கள் வசந்த சேனைக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும் ...

அர : உன்னை அறிவாளி என்று நினைத்தேன் நீ ஒரு ஞான சூன்யம் !

வசந்தி : முட்டாள் என்று மூவாயிரம்முறைசொல்லுங்கள்சந் தோஷம் ! ஆனல் உங்க வசந்தி வஞ்சகி என்று மாத்தி ரம் நினைக்காதீர்கள் ஸ்வாமி! ஒரு யோசனை தான் உங்க ளைக் கேட்டேன் என் மகன் மட்டுமல்லவே அவன் தங் கள் மகனுந்தான் தங்களை விட எனக்கென்ன ஆசை

வந்து கிடக்கிறது ! என் லட்சியம் தங்கள் சுகம் சுயநல மல்ல.

அர : எனக்குத் தெரியாதா கண்ணே! ஆனல் வசந்தன் !

வசந்தி : அந்த பேச்சு வேண்டாம் விபரீதப் பேச்சு ! பைத்தியத்துக்கு பட்டம் சூட்டினல்...என்ன ஆகுமென்று எனக்கும் தெரியும் உங்களை கிண்டல் செய்தேன். நீங்கள் அதற்குள்...க்கும் !

அர : வசந்தி —

வசந்தி ப்ரபூ ! நிலா முற்றமும் தேடுகிறது வாருங்கள் (மனதிற்குள்) 'இனி புருஷோத்தமனை நம்பி புண்யமில்லை புதிய திட்டம் போடவேண்டும் நன்றி கெட்ட இந்த ராஜனை நாடு கடத்த வேண்டும். மனோகரனைக் கொல்ல வேண்டும் வசந்தனுக்கு பட்டம் சுட்டவேண்டும். இதற்கெல்லாம் உதவி செய்யக்கூடியவன் என் பழைய காதலன் உக்ரசேனன் தான்' (வசந்தசேனை அறைக்குள் போகிருள் வசந்தன் பின் தொடர்கிருன்)

வசந்தி : (கடிதம் எழுதும்போது திடுக்கிட்டு யாரங்கே! ஒரு கொடியவன் உள்ளே சிக்கியிருக்கிருன் விடாதீர்கள் அவனை!

வசந்தன் : (அருபம் அழைக்க) நீ பிசாசா? கடவுளா !

அருபத் : இல்லை வசந்தா நான் மனிதன்.

வசந்தன் : மனுஷனு ? என் கண்ணுக்கு தெரியலையே.

அருபம்: தெரியமாட்டேன்! என் அய்யன் குருநாதன் அருள் அறிவின் விளைவு ஒரு மருந்தின் வேலை.

வசந்தன் : அந்த மருந்தை எனக்கு கொஞ்சம் தாரியா ?

அருபன் : தருகிறேன் ஆனல் நீ நான் சொல்றபடி கேட்க வேண்டும். முதலில் ஒரு சிப்பாயை வரச்சொல் ..
(விகடன் அழைக்க சிப்பாய் ஒருவன் வருகிருன் அருபம் அவனைக் கட்டி போட்டுவிட்டு நழுவுகிறது.
(வசந்தசேனை கடிதம் எழுதி கூட்டிற்குள் போடுகிருள்)

0 0 0

கேசரி: (குகை) பழிகாரி ஓலை தயாரித்து விட்டாள். அவள் காரியத்தை வெற்றிகரமாக்க கடைசி ஓலை கொஞ்சம் ஏமாந்தால் அதுவே நமக்கு சாவோலை ஆகிவிடும்.

சத் : விஷயத்தைச் சொல் வர்மா !

கேசரி: வசந்தனுக்கு முடிசூட்ட முயன்ருள் வஞ்சகி! மன்னர் மறுத்தார். ஆகவே இந்த மாநிலத்தை வசப்படுத்தி மகனை அரசனுக்க மாற்ருன் உக்ரசேனனுக்கு மடல் அனுப்பி யிருக்கிருள்.

மனோ : உக்ரசேனன் ! மயபுரிவேந்தன் !

ராஜப் : ஆம்! நம் சாம்ராஜ்யத்தில் நுழைய சமயம் பார்த்திருப்பவன்.

கோரி : உக்ரசேனனிடமிருந்து பதில் கொண்டு வருபவன் இந்த வழியேதான் வந்தாக வேண்டும். வாருங்கள் பார்ப்போம்.

மனோ : (குதிரையில் வரும் அட்சயனை நிறுத்தி) யார் நீ?

அட் : என்னையா கேட்கிறாய்? நான் நான்தான் :

கேசரி : எங்கே போய்க்கொண்டிருக்கிறாய் ?

அட் : போகவேண்டிய இடத்திற்கு !

(மனோகரனும் ராஜப்ரியனும் அட்சயனைத் தாக்கி அவனை ஒரு கல் தூணில் கட்டிவிட்டு கடிதத்தை எடுக்கிறார்கள்)

"அன்புள்ள வசந்தசேனைக்கு!

அட்சயனை துணைக்கு வைத்துக்கொண்டு அரண்மனைக்குள் ஆகவேண்டியதைக் கவனி. படைகளும் நானும் புறப்படுகிறோம். புருஷோத்தமனை தொலைப்போம். புது வாழ்வு தொடங்குவோம். உத்ரசேனன்"

ராஜப் : துரோகம் விடக்கூடாது இதை !

மனோ : இப்போதே புறப்படுவோம் அந்த வக்ர புத்திக்காரியை பூண்டோடு அழிக்க வேண்டும்

கேசரி : அழித்து விட்டால் உங்கள் வீரம் வெளிப்படும். அந்த வேசியின் வேஷம் வெளிப்படாது இளவரசே ! அரை நொடியில் சாகடிக்க அல்ல நான் இப்படியெல்லாம் இவ்வளவு காலம் ஏங்கித் திரிவது ? என்னாலும் முடியும் எப்போதோ செய்திருப்பேன்.

மனோ : ஏன் செய்யவில்லை ?

கேசரி : விவேகம் இளவரசே! விவேகம் அப்போது கொன்றிருந்தால் அந்த கள்ளிக்காக கண்ணை இழந்த அரசர் கண்ணீர் வடித்திருப்பார். அவள் சூழ்ச்சிகள் அம்பலமாயிருக்காது. சூதுக்களை உலகம் தெரிந்து கொண்டிருக்க முடியாது. அவளை சாகடிப்பதில் இல்லை நம் சாமார்த்தியம் அவள் சதிகளை அம்பலப்படுத்துவதில்தான் இருக்கிறது.

மனோ : அதற்கு வழி

கேசரி ! முள்ளை முள்கொண்டு எடுப்பதுபோல சூழ்ச்சியை சூழ்ச்சியால்தான் வெல்லவேண்டும் சொல்லுகிறேன் வாருங்கள்.

காவலன்! (அரசன் மாளிகை) மகாராஜா பைத்தியத்திற்கு வைத்தியம் பார்ப்பதில் மகா கெட்டிகாரனும் ஒருவன்.

அர : அப்படியா வசந்தியிடம் அவனை அழைத்துப்போ!....

காவலன் : உத்திரவு ! (வசந்தசேனை அந்தப்புரம், காவலன் வேடத்தில் உள்ள மனோகரனைக் காட்டி)

காவ : அம்மா இவரை மகாராஜா தங்களிடம் அனுப்பினர். பெரிய வைத்தியராம்...

வசந்தி : யார்?...

போ. அட் : நான் ஒரு வைத்தியன் என் பெயர் உக்ரசேனத் தூதன்

வசந்தி : (புரிந்து கொண்டு) நீளமான பெயர்...(கடிதத்தை வாங்கி படித்துவிட்டு) உமது பெயர்?

போ. அட் : அக்ஷயன்

வசந்தி : அரசனை சரியானபடி ஏமாற்றியிருக்கிறீர்.

போ. அட் : ஆமாம்..என்னை யாரென்று யாராலும் கண்டு பிடிக்க முடியாது ...

வசந்தி : சரி....நீர்வைத்தியரைப்போலவே நடித்துக்கொண்டிரும் மற்றவைகளை நான் கவனிக்கிறேன்.

போ. அட் : நடப்பதா பிரமாதம்! . ஓ ..

0 0 0

வசந்தன் :ஏய் வைத்தியா .. மருந்து ...மருந்துண்ணு உயிரை வாங்குரே !

வைத் : அதுக்குத்தான் முயற்சி பண்றேன் நடக்கலியே !

வசந்தன் : எதுக்கு ? உயிரை வாங்கவா ?

வைத் : சே.. சே ..ஆண்டவன் புண்யத்தில் உங்க ஆயுசும் நீடிச்சு இந்த வியாதியும் நீடிச்சு...அடியேன் உத்தியோகமும் நீடிச்சு இருக்கணும்னு சதா எமதர்மனை பிரார்த்தனை பண்ணிக்கிட்டேயிருக்கேன்.

வசந்தன் : வைத்தியா! எமனுக்கு வாகனம் என்னடா ?

விசு எருமைக்கடா அதனாலேதான் கண்டவுங்ககிட்டேயெல்லாம் மெதுவா வர்ரான்

வசந்தன் : ஆமாம் . சந்தேகமில்லே சந்தேகமில்லே ..

விசு : வைத்தியரே என் அனுதாபங்கள் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்

வைத் : என்ன விகடரே

விசு : நிலையில்லா வாழ்வு இதோ . புது வைத்தியர் வந்து விட்டார் வசந்தனுக்கு !

வைத் : அப்போ நான் ..

விசு : சற்றே விலகியிரும் பிள்ளாய்...

வசந்தன், (போலி அட்சயனை பார்த்து) ஏ, புது வைத்யா... உனக்கு என்னென்ன தெரியும்.

போ. அட : மருந்து கொடுக்காமலேயே ஒரு முடிவு கட்டுவேன் வியாதியை !

வசந்தன் : அப்படீன்னு ..நீ தான் புது வைத்தியன் சந்தேகமில்லே ஏ பழைய வைத்யா நீ ஓடு...

உக்ர : (கூடாரம்) வீரசிம்ஹா ! திடீரென புறப்படவேண்டி யிருக்கும் . நமது படை வீரரெல்லாம் தயார்தானே !
வீர : தயார் அரசே !
உக்ர : ஓலையொன்றைக் கொடுத்து புருஷோத்தமனுடைய அரண்மனையில் நுழைந்து வசந்தசேனையின் மூலம் இதை அக்ஷயனிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

0 0 0

வசந்தி : உக்ரசேனர்வந்துவிட்டாராம், சாதுவேடத்தில்வருகிறார்களாம் எல்லோரும்.
போ அட் : சாதுக்கள் வேடம்...
வசந்தி : என்ன அக்ஷயா ?
போ. அட் : ஒன்றுமில்லை சாதுவேடத்தில் தானம்மா பல சாம்ராஜ்யங்களை கவிழ்த்திருக்கிறார்கள்...
வசந்தி: ஓகோ! ஆமாம் அவர்களை எப்படி அரண்மனைக்குள் அழைப்பது ?
போ. உட : ஆலோசிக்க வேண்டியதுதான்.
வசந்தி ; ஆலோசனை என்ன அரைநொடியில் ஏற்பாடுசெய்கிறேன்.

(உக்ரசேனனின் சாதுக்கூட்டம் மேள வாத்தியங்களுடன் பக்தி முழக்கங்களுடன் வரவேற்கப்படுகின்றது அரசனும் வசந்தியும் சாதுக்கூட்டத்தை பக்தி சிரத்தையுடன் மரியாதையுடன் வரவேற்று உபசரிக்கிறார்கள்....

அர : வரவேண்டும்.. வரவேண்டும் .. பாக்கியவானுனேன்.
உக் : பகவானின் பேரருள் சித்திக்கிட்டும் புருஷோத்த மகராஜன் நாடகமே உலகம் நாளை நடப்பதை யாரறிவார்!
அர : உண்மை உண்மை !
உக் : இதுதான் ராணியோ !
அர : (தலையை அசைக்கிறார்)
உக் : மகாலக்ஷ்மி. கலிகால நளாயினீ ! ராணி மனம்போல் வாழ்வாய் ! எண்ணங்கள் நிறைவேறும்....
வசந்தி : வசந்தா சுவாமிக்கு நமஸ்காரம் செய்....
வசந்தன்: ஒருமையுடன் உனது திருமலரடி நினைக்கிற உத்தமர் தம் உறவு வேண்டும் விகடா பாடத்தை மறந்துவிட்டேண்டா....
வசந்தி : போதும் போதும்
உக் : வாழ்க! வாழ்க ஏ ராஜன் நல்ல சமயத்தில்தான் நான் வந்திருக்கிறேன் உனக்கு ஒரு பெரிய ஆபத்து காத்திருக்கிறது....
அர : சுவாமி !
உக்: அந்த ஆபத்திலிருந்து தப்ப வேண்டுமானுல் நீயும் உன்

ராணியும் இந்த க்ஷணம் முதல் நாளை காலை வரையில் பிரிந்திருக்க வேண்டும்.

அர : அப்படியா ?

உக் : இல்லாவிட்டால் மரணம் சம்பவிக்கும் !

வசந்தி : மகாராஜாவை பிரிந்திருப்பதா ?

அர : நாளை காலை வரையில்தானே வசந்தி !

உக் : உம் பிரியுங்கள் .. பிரியுங்கள் ...

வசந்தன் : ஞாபகம் வந்துவிட்டது உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர் உறவு கலவாமை வேண்டும்.

வசந்தி : வசந்தா

வசந்தன் : மருவு பெண்ணாசை மறக்க வேண்டும்.

அர : டேய் ! சும்மாயிரு

வசந்தன் : மதிவேண்டும்.

வசந்தி : வசந்தா ! (போகிருள்)

உக் : எல்லாம் கடவுள் செயல்! ராஜன் ! இந்த சடலம் சிறிது களைப்பாற வேண்டும்.

அர : இதோ ஏற்பாடு செய்கிறேன்....

(அரசன் போகிருன். சாதுவேடத்திலிருக்கும் உக்ரசேன ஹுடைய படைவீரர்கள் அரண்மனையெங்கும் பரவி காவலாளிகளைக் கொன்று அவர்களுடைய இடத்தை ஆக்ரமித்து கொள்கிருர்கள்.

0 0 0

மனோ : (குகை காஷாய உடை ! அதற்குள்ளே கட்கமேந்திய படை மடை திறந்தாற்போல் நுழைந்துவிட்டார்கள்— தடை எதுவுமின்றிதபோதனர் வேடத்தில் இனிஅரைக் கணம் தாமதித்தால் சோழ மண்டலம் அடிமையாகி விடும் உடன் புறப்படுங்கள்.

ராஜப் : ஆமாம் அதுதான் சரி விடக்கூடாது உடனே புறப் படுங்கள்.

சத் : பொறுங்கள்மனவலிமை இருக்கிறது நமக்குதாயகத்தை விடுவிக்க ! அதே நேரத்தில் மாற்ருரின் படை வலிமையைப் பற்றியும் கொஞ்சம் யோசிக்க வேண்டும் இதோ ராஜப்பிரியனை உடனே பாண்டிய நாட்டுக்கு அனுப்பு வோம். பாண்டிய நாட்டு படைகள் வந்துவிட்டால் நமது போராட்டத்தை துவக்குவோம்.

கோரி : நல்ல யோசனை! இளவரசே! நீங்கள் உடனே அரண்மனைக்கு செல்லுங்கள் அப்போதுதான் அன்னை, தந்தை மனைவி ஆகியோருக்கு எந்தவித ஆபத்தும் அணுகாமல் கண்காணித்துக் கொள்ளமுடியும் மற்றவைகளை நாங் கள் கவனித்துக் கொள்கிருேம்.

சத் : மனோகரா! நீ உடனே புறப்படு ராஜப்ரியா நீ உடனே பாண்டிய நாட்டுக்குப் புறப்படு !
உக் : (பூஜை அறை) யாரது ஓ ராணி வசந்தாதேவியா ?
வசந்த் : ஸ்வாமிகளுக்கு ஆண்டவன் நினைவோ ?
உக் : ஆண்டவனைப் பற்றியல்ல ஆண்டு கொண்டிருப்பவனை பறறி உட்கார் உல்லாசி
வசந்தி : பழரசம் அருந்துங்களேன்
உக்: முதலில் உன் பார்வை ரசம் அருந்துகிறேன் கண்ணே !
வசந்தி ; உங்களைப் பார்த்து எவ்வளவு நாட்களாகின்றன.
தோழி : கூப்பிட்டீர்களா அம்மா.
வசந்தி : இல்லை போடி
உக்: ஆகா முகிற்கூட்டம் முல்லைத்தோட்டம் ரோஜாகொல்லை
வசந்தி ; ஸ்வாமி !
உக் : மொத்தத்தில் இன்பத்தின் எல்லை
வசந்தி : ஆமாம் திட்டங்கள் எல்லாம் எப்படி தீட்டியிருக்கிறீர்கள் ?
உக் : திவ்யமாக! அரண்மனையின் முக்கிய பகுதிகளில் எல்லாம் நமது ஆண்டி வேடந்தறித்த வீரர்கள் ஆக்ரமித்துக் கொண்டிருக்கிறார்கள் நான் ஆணையிட்டால் போதும் போர் ! புருஷோத்தமன் கைது !
வசந்தி: போர்கூடதேவைப்படாது புருஷோத்தமனின் படை வீரர்களை என் கைக்குள் போட்டு வைத்திருக்கிறேன்.
உக் : சபாஷ்! போர் வந்தால்தான் என்ன? எதிரிப்படைகள் அரண்மனைக்குள் வந்த பிறகு யாரால்தான் எதிர்த்து ஜெயிக்க முடியும் ?
வசந்: எதிரிப்படை அரண்மனைக்குள் மட்டுமா வந்திருக்கிறது
உக் : அந்தப்புறத்திற்கே வந்துவிட்டது என்கிறாயா? இது சண்டையிட அல்ல சரணாகதி அடைய
வசந்தி : இரவு வருகிறேன்.

0 (சிறைச்சாலை தாழ்வாரம்) 0

காவலன் : ஏ அந்தப்பக்கம் போகாதே விஜயாம்மா பிரசவ வேதனைப் படுறாங்க ஆங் அப்படியா...
பத்மா : (சிறைக்குள் குழந்தையிடம் என் செல்வத்துட்செல்வமே! தாதியார் ஆயிரம்பேர் தமிழிசை கேட்டு வைர மணித்தொட்டிலிலே உறங்கவேண்டிய நீ இப்படி வைக்கோல் நிறம்பிய கொட்டிலிலே உருண்டு கொண்டிருப்பாய் என்று நினைக்கக்கூட இல்லையே...
விஜயா : அத்தே !
பத்மா : கண்ணே... பாண்டியராஜன் பெண்ணே....நீ இப்படி கஷ்டப்படவா என் மருமகளாக வந்தாய்....

விஜ : நான் வந்த பிறகுதான் அத்தை-உங்களுக்கும்உங்கள் அன்பு மகனுக்கும் இத்தனை வேதனைகள்....எல்லாம் இந்தப் பாவி அடியெடுத்து வைத்த பிறகுதான் ...
பத் : விஜய்! இல்லையம்மா...உன் மலரடிப்பட்டால்மண்ணும் பொன்னுகும்...பொன் மாடத்தை தூசி மேடாக்கியவள் நீயல்ல ...அவள் வாழ்கிருள் ஆனந்தத்தோடு....

0 0 0

வசந்தி : (பூஜை அறை) திராட்சை எப்படி இருக்கிறது ?
உக் : உன் விரல் பட்ட இடமெல்லாம் இனிக்கிறது.
வசந்தி : என் இதழின் சுவையைவிட மட்டந்தானே இந்தக் கொய்யா ?
உக் : அதில் என்ன பொய்யா ?
வசந்தி: அன்பே எத்தனை நாட்களாகின்றன. இந்த ஆனத்தம் அனுபவித்து ?
உக் : மீண்டும் உன்னைப் பார்க்கப் போகிறேனே என்று ஏங்கி தவித்தேன் ஏந்திழையே !
வசந்தி : சுவாமி !
உக் : வசந்தி !
வசந்தி : பிரபோ ! இப்போ நாம் எங்கிருக்கிறோம் ?
உக் : சொர்க்கலோகத்துக்கு போய்க் கொண்டிருக்கிறோம் கண்ணே !

0 0 0

வசந்தன் : (அறைக்கு வெளியில்) வைத்தியா! வைத்தியா!
மனோ : என்ன ?
வசந்தன் : அம்மாவும், சாமியாரும் சொக்கலோகத்துக்கும் போய்க்கொண்டிருக்காங்க! வா! வா! போ அம்மாவைக் காப்பாத்துவோம்.
மனோ : நீ போய் உடனே மகாராஜாவை அழைத்துக் கொண்டு வா.
வசந் : ஆ! அதுதான் சரி சந்தேகமில்லே சந்தேகமில்லே!

0 0 0

வசந்தன் : (அரசர் அறை) அப்பா! அப்பா!
அர : என்னடா இது ?
வசந்தன் : அம்மாவும், சாமியாரும் சொர்க்கலோகத்துக்குப் போகிருங்களாம் !
அர ஆ...
வசந்தி : வாப்பா....வா....
உக் (பூஜை அறை) இத்தனை விளக்குகள் ஏன் வசந்தி?
வசந்தி : ஏன் ஒரு விளக்கு போதுமா!
உக் : அது கூட தேவையில்லே; அணையா விளக்கு நீ அருகே

இருக்கும்போது! (அரசர் கதவை இடிக்கிறார். உக்ர சேனன் வாளை உருவுகிறான்)

வசந்தி: வேண்டாம். காரியம் கெட்டுவிடும். நான் பார்த்துக்கொள்கிறேன். இப்படி வாருங்கள் ... அறைக்குள் அனுப்பி மூடுகிறாள் கதவு உடைபடுகிறது) யாரது?

அர: யாரா? பாதகி!

வசந்தி: ஆ! பிரபு! அடியாளைப் பார்க்கக்கூடாதே தாங்கள்? ஆண்டவன் கட்டளையாயிற்றே?

அர: எதுடி ஆண்டவன்கட்டளை? எது? அர்த்தராத்திரியிலே ஹம்ச தூளிகா மஞ்சத்தில் அந்த ஆண்டிப் பயலோடு ஆனந்தக் கேளிக்கை நடத்த வேண்டுமென்பதா ஆண்டவன் கட்டளை?

வசந்தி: ஆ! கண்ணால் கண்டதும்பொய்! காதால்கேட்டதும் பொய்! தீரவிசாரிப்பதுதான் மெய், மஹாராஜா!

அர: சீ! நாடகமாடாதே! எங்கே அந்த ஆண்டி?

வசந்தி: அவர் தியானலோகத்தில் இருக்கிறார்.

அர: உத்யானலோகத்திலா? ஊர்கெடுக்கும் பதரே! இனியும் நீ புருஷோத்தமனை ஏமாற்ற முடியாது.

தோ: மஹாராஜா! அமைதியாக ஆலோசனை செய்யுங்கள் அம்மாவை பழி கூறுதீர்கள். அவர்கள் உத்தமி!

அர: உத்தமிக்கு லக்ஷணம் உரைக்க வந்தவளே உண்ட வீட்டிற்கு ரண்டகம் செய்யும் துரோக வடிவமே! உன்னால் வந்ததுதாண்டி இவ்வளவும், உயிர்விடப் போகிறாள் உடனே வந்து காப்பாற்றுங்கள் என்று அலறினாய்! உத்தமர் சத்யசீலருக்கும்! பத்தினி பத்மாவதிக்கும் களங்கம் கற்பித்தாய். அப்போதெல்லாம் தெரியாதபடி நீ இந்தத் திருடியின் கன்னக்கோலென்று!

தோ: மகாராஜா!

அர: உண்மையைச்சொல்! நீயும் இந்த நாசகாரியும் என்னை ஏமாற்றி வாழ்ந்தது உண்மைதானே? சொல்லடி! சொல்!

வசந்தி: அவளை ஒன்றும் செய்யாதீர்கள்! எல்லாம் நானே சொல்லுகிறேன். கணவனுக்கு விஷம் கொடுத்து கொன்றேன். களங்கமற்ற பத்மாவதி கற்பிழந்தாள் என்று கதை கட்டினேன்.

அர: ஆ!

வசந்: என்னடா உண்மையெல்லாம் சொல்லுகிறாளே என்று யோசிக்கிறீரா? இதை யெல்லாம் சொல்வது உம்மிடம் மன்னிப்பு பெற அல்ல இனி உம்மால் என்னை ஒன்றும் செய்ய முடியாது என்ற மனோ தைரியத்தில்!

அர: மோசக்காரி!

வசந்தி: மோசக்காரி! நானு மோசக்காரி? பல ஆண்டுகளாக என்னை பள்ளியறைப் பதுமையாக மாத்திரம் வைத்துக் கொண்டு என் பாலகனுக்கு பட்டாபிஷேகம் செய்ய வேண்டும் என்ற ஒரே ஒரு தணியாத ஆசையைக் கூட தரைமட்டமாக ஆக்கிவிட்ட நீரல்லவா மோசக்காரர்?

அர: உன் பாலகனுக்கு பட்டாபிஷேகம்! மறந்துவிடு அதை இந்த பூமியைபுருஷோத்தமன் சந்ததியிடமிருந்துயாரா லும் பறிக்க முடியாது.

வசந்த: கனவு காணுதீர்! வாழ்த்துப்பத்திரம் தயார்செய்து வையும் வசந்தனின் மகுடாபிஷேகத்திற்கு! கேசரிவர்ம னின் புதல்வன் வசந்தனின் மகுடாபிஷேகத்திற்கு.

அர: நிறுத்தடி நிறுத்து வேசி

வசந்: பாவம் இப்போதுதான் தெரிந்ததோ?

அர: பாவம் பரத்தை உன்னை உயிரோடு வைத்திருந்தால் உளறிகொண்டே இருப்பாய் யாரங்கே ஓடி வாருங்கள் இவளைப் பிடியுங்கள்.

வசந்தி. காவலாளிகள் அசையாமல் நிற்கிருர்கள் நடக்காது அஸ்தமித்துவிட்டது உமது அதிகாரம் இவர்கள் என் வீரர்கள் அக்ஷயா இவனைக் கைது செய்!

அர: ஆ என்னையா கைது செய்யச் சொல்லுகிருய்?

வசந்தி ஆம்! உன்னைத்தான் கைது செய்யச் சொல்கிறேன். அதுவும் இந்த கடைசி ராஜ உடையுடன்! அக்ஷயா! ஏன் நிற்கிருய் அக்ஷயா? உம் நடக்கட்டும்.

அர: (தந்தையை மனோகரன் கைது செய்கிருன் தனக்குள்) புருஷோத்தமா! புறமுதுகுகாட்டியறியாத உன்பரம்பரை யின் புகழை மண்ணோடு மண்ணுக்கிவிட்டாய்! வாளேந் திய உன் கரங்களிலே வஞ்சகி பூட்டிய விலங்கு! ஏ! வீர பூமியே! என்னை மன்னிக்க மாட்டாயா?

0 0 0

மனோ: (சிறைக்கூடம் சிரமசைந்தால் சிற்றரசர்கள் கப்ப முடன் வணங்குவர் சேனைத்தளபதிகள் சீறி எழுவர். அந்த செங்கோல் சிங்கத்தின் ராஜஸ்ரீகம் இன்று சிறைக் கம்பிகளுக்குள்ளடங்கி விட்டது

அர: அட கோழைகளே ராஜவிசுவாசமுள்ளவீரன்ஒருவன் கூட இங்கே கிடையாதே?

மனோ: இருக்கிருர்கள் அத்தனை பேரும் சிறைச்சாலையில் ரத்தச்செலவே இல்லாமல் கத்தி முழக்கம் கேட்காமல் வெற்றி முரசு கொட்டியிருக்கிருர் எங்கள் வேந்தர்.

அர: வேந்தர்! வேல் பிடிக்கத் தெரியாமல் கமண்டலமேந்தி களம் புகுந்த கபோதிக்கு பெயர் வேந்தன்!

மனோ : அப்படியல்ல! உக்ரசேனன் புத்திசாலி! கட்டிலறையிலே இருக்கும் புருஷோத்தமரை எதிர்க்க கணைகளோ, கேடயங்களோ தேவைப்படாதென தெரிந்திருக்கிறார் ஆகவே காவி கமண்டலங்களே போதுமென தீர்மானித்திருக்கிறார்.

அர : போதுமடா நிறுத்து. வேசி வீசிய வலையிலேவிழுந்து விட்ட காரணத்தால் என் வீரம் விலைபோய் விடவில்லை.

ம: யார் வேசி? வசந்தசேனை பத்தினி! பத்தரைமாற்று தங்கம்

அர : இல்லை. என் பத்தரைமாற்றுதங்கத்தைத்தான் பாதாள சிறையிலே போட்டேனே! பாவி! பத்மாவதி! நீதான் பத்தரைமாற்றுதங்கம். உன்னைப்பழிகூறிய பாதகனுக்கு சரியான பரிசு கிடைத்து விட்டது பத்மாவதி!

மனோ : வருந்திப் பயனில்லை. நாளை காலையிலே வசந்தனுக்கு பட்டாபிஷேகம்.

அர : வசந்தன் அந்த வஞ்சகியின் மகன் வக்ர மூளைக்காரன் வளமார எமது பூமியின் வருங்கால காவலன் ஐயகோ! மனோகரா! ஆளப்பிறந்த என் செல்வமே! உன்னைசாகத் துரத்திய சண்டாளனுக்கு சரியான தண்டனை கிடைத்து விட்டது. மனோகரா உனக்கும் உன் மாதாவிற்கும் கண் மணி விஜயாவுக்கும் எத்தனை இடையூறுகள்செய்தேன்! அதற்கெல்லாம் யாரிடம் மன்னிப்பு கேட்பேன்? நீ எங்கிருக்கிறாய் மனோகரா! ஆயிரம் குற்றங்கள் செய்திருந்தாலும் தந்தைக்கு ஆபத்து என்றால் தலைகொடுக்க ஓடி வருவாயே! உன்னிடம் யார் இந்தச் செய்தியை சொல்வார்கள் மனோகரன்! மனோகரா! எங்கிருக்கிறாய் மனோகரன்

மனோ : இங்கேதான்!

அர : எங்கே? என் மனோகரா எங்கே? எங்கே மனோகரா? மனோகரா! மனோகரா!

வசந்தி : (அரண்மனை) அக்ஷயா பாதாள சிறையில் கிடக்கும் விஜயா குழந்தை பெற்றிருக்கிறாளாம்!

மனோ : ஆ!

வசந்தி : என்ன அக்ஷயா?

மனோ : ஒன்றுமில்லை ஒன்றுமில்லை அழியப்போகும் நேரத்தில் அருபபு பூளைத்திருககிறது.

வசந்தி : ஆமாம், அதைத்தான் கிள்ளி எறியவேண்டும் நீ!

மனோ : ஆ என்ன நானா?

வசந்தி: உன்னை விட யார் இருக்கிறார்கள் இந்த காரியத்தை செய்ய! இந்தா இப்பொழுதே போ!

மனோ : (ஈமாயத்தை வாங்கி) என் செல்வத்தை நான் கொல்லவேண்டும் இல்லை இவளை வாளை வருகிறான்)

மனக்குரல் : மனோகரா நில் ஆத்திரப்படாதே, அவசரத்திற்கு அடிமையாகாதே! அரண்மனை முழுதும் எதிரிகள். அன்னைசிறையில் தந்தையோ தவிக்கிறார். வாள்நீட்டிப் பாய்கிறாயே உன் வாடாமலர்களை யார் காப்பாற்றுவது ? உன் வண்ணக்கிளிகளை யார் காப்பாற்றுவது சிறைக்கு போகிறான் [கட்டப்பட்ட கட்டை அட்சயன் அறுக்கிறான்]

வசந்தி! நாளை ஆகவேண்டிய காரியத்தை ஆலோசிப்போம்.

உக் : இனியும் என்ன ஆகவேண்டியது ?

வசந்தி : நாளை வசந்தியின் பட்டாபிஷேகம்

உக் : நிச்சயமாக! ஆனால் அதற்குள் நாடு நம் வசமானதை அறிவிக்க வேண்டும்.

வசந்தி : அறிவிப்பதால் எதாவது ஆபத்து ?

உக் : ஆபத்து யாரால்? என்னை எதிர்க்கக் கூடியவர்கள் இந்த உலகத்தில் இருக்கிறார்களா ?

வசந்தி உற்சாக வெள்ளத்தில் உயிரோடு இருக்கும் மனோகரனை மறந்து விடக் கூடாது.

மனோ : (சிறை) அம்மா....

பத்மா : நீ யார் ?

மனோ : மனோகரன் என்னை அனுப்பினார்!

பத்மா : மனோகரன்....என் கண்மணி சுகமாக இருக்கிறானா?

விஜ : அத்தே ! அவர் எங்கிருக்கிறாராம் ?

மனோ சதா உங்கள் இருதயத்தில் இருக்கும் அவர் வேறு எங்கு இருப்பார்.

பத்மா : யாரப்பா நீ ?

மனோ : அதைப்பிறகு சொல்லுகிறேன். இப்போது நீங்கள் இருவரும் இதைவிட்டு தப்பிவிட வேண்டும்.

பத்மா : என்ன ?

மனோ : ஆமாம் மனோகரனின் ரகசிய ஏற்பாடு. இதோ முத்திரை மோதிரம். பயமின்றி யாருடைய தடையுமின்றி வெளியேறலாம் புறப்படுங்கள்

பத் : தந்திரமாக தப்பிவிடுவது கூடாது முடியாது மகாராஜாவின்உத்தரவைமீறமுடியாதுமனோகரனிடம்சொல்லிவிடு

விஜ : அத்தே !

பத் : தம்பி ! மனோகரனிடம் சொல். எனக்கு ஒரு செல்ல பேரன் பிறந்திருக்கிறான். சிறைச்சாலையில் என்று !

மனோ : இந்தப் பேரனுக்கு வரும் பேராபத்தை நீக்கத்தான் நீங்கள் வெளியேற வேண்டும் என்கிறேன்.

பத் : அரசன் கட்டளையை அரசியே மீறுவதா முறையல்ல.

மனோ: அப்படியானால் ராஜகுமாரி! அந்த குழந்தையையாவது கொடுங்கள் நான் கொண்டுபோய் விடுகிறேன்.

விஜ: ஆ!....குழந்தையா?
மனோ: குழந்தையின் உயிரைக்காப்பாற்ற வேண்டுமானால்?
விஜ: அத்தே இவனை நம்பாதீர்கள் குழந்தையை கொல்வதற்கு ஏதோ சூழ்ச்சி நடக்கிறது.
மனோ: இல்லை....இல்லை....
விஜ: முடியாது முடியாது நீ போய்விடு.

0 0 0

(உண்மை அட்சயன் அரண்மனை வருகிறான். மனோகரன் தன்னைக் கட்டிப்போட்ட விவரத்தை சொல்கிறான். பின்னர் சிறைக்கு மனோகரனை தேடிவருகின்றனர்) 0 0

மனோ: எங்கே! அந்தக்குழந்தையைக் கொஞ்சம்கொடுங்கள் மனோகரனுடைய குழந்தைக்கு நான் ஒரு முத்தம்கூட கொடுக்கக் கூடாதா?
விஜ: அத்தே நீ போகிறாயா இல்லையா? சூழ்ச்சிக்காரா?
மனோ: இல்லை விஜயா என்னைத் தெரியவில்லையா உனக்கு (தன் பொய்தாடியை களைத்து) விஜயா என்னை தெரியவில்லை, உனக்கு...
வசந்தி: பிடியுங்கள் இவனை!
மனோ: பார்ப்போமடி அதை (கட்டாரியை வசந்திமீது வீச குறி வைக்கிறான்)
வசந்தி: ஆ—!
பத்: மனோகரா! (தடுக்கிறான்) (உக்ரசேனன் எறிந்த கட்டாரி மனோகரன் கையில் பாய்கிறது)
மனோ: நாசமாகி விட்டது! எல்லாம் நாசமாகி விட்டதம்மா!
வசந்தி: நாசமா அதற்கும்நாள்குறித்திருக்கிறேன்மனோகரா அந்த மகத்தான சம்பவம் நாளைகாலையில், ராஜமாளிகையில்! உன் குழந்தைக்கு மரணாபிஷேகம்!
விஜ: அத்தே! அத்தே!
பத்: விஜயா!
மனோ: அம்மா, அம்மா சிறையில் பூட்டப்பட்டு விட்டார் தங்கள் ஆணையை மீற முடியாத நான் இந்த பாதகியின் உத்திரவுக்கு பணிந்தேன் இந்த பாவியின் கரங்களால் பாதாள சிறையில் பூட்டினேன்.
வசந்தி: இழுத்துச் செல்லுங்கள்
மனோ: அம்மா உண்மையை உணர்ந்து கொண்ட தந்தை உங்களையும்என்னையும்காணத்துடிக்கிறார். இறந்துபோன கொடுமைகளை எண்ணி எண்ணி கண்ணீர் வடிக்கிறார். கலங்கிதவிக்கிறார், கலங்கித்தவிக்கிறார் அம்மா அம்மா.
பத்: மகாராஜா உண்மையை உணர்ந்து கொண்டார், என்

மகுடபதி உண்மையை உணர்ந்து கொண்டார். உண்மையை உணர்ந்து கொண்டார்.

விஜ : அத்தே ! என்ன அத்தே !

பத் : இருள் நீங்கிவிட்டது இன்பம் உதயமாகிறது.

விஜ : இன்பம் நமக்கா இந்த நிலையிலா ?

பத் : மகாராஜா உணர்ந்துவிட்டார். என் மகுடாபதி உண்மையை உணர்ந்து விட்டார்.

0 0 0

(மகேசுரனை கட்டிவைத்து உக்ரசேனன் அடிக்கிருன். வசந்தன் வந்து விட்டுவிடுமாறு கூறுகிருன். வசந்தி வசந்தனை இழுத்துப்போய் கதவை சாத்திவிடுகிருள்)

0 0 0

காவலாளி!(சிறை குழந்தையைக்கொண்டுவரும்படிஉத்திரவு

விஜ : ஆ! அத்தே !

காவ : உம் கொடுங்கள்.

பத் : இந்த சின்னஞ்சிறு சிசு என்னப்பா குற்றஞ் செய்தது ? ஒரு குற்றமும் செய்யவில்லையே இந்த குழந்தை! கொடியவர் உலவும் உலகில் ஜனித்ததைத்தவிர வேறொருகுற்றமும் செய்யவில்லையே !

கா : அதெல்லாம்எங்களுக்குதெரியாதுமகாராணி உத்திரவு

விஜ : யாரட ாமகாராணிபோவெளியே என்குழந்தையை கேட்க நீங்கள் யார்? அந்த பாதகியிடம் சொல் பாண்டிய நாட்டு ராஜகுமாரி தான்பெற்ற பைங்கொடியை தர மறுக்கிருள் என்று துணிவிருந்தால் நேருக்கு நேர் போரிட்டுப் பெற்றுக் கொள்ளச்சொல்.

பத் : விஜயா பொறுமையாய் இரு !

விஜ : அத்தே! என்குழந்தையைக்கொடுத்துவிடச்சொல்லுகிறீர்களா அத்தே ! அந்தக் கொலைக்காரியிடம் குஞ்சுகளைக் கொல்ல வட்டமிடும் பருந்தை கோழிகள் கூட எதிர்த்துப் போராடுமே! அத்தே அவைகளைவிட தாய்மை உணர்ச்சி அற்றவளா நான்? என்னைக்கொன்று விடச் சொல்லுங்கள் என் உயிர்ப்பான பிறகு, என் ஜீவ ஓவியத்தை எடுத்துக்கொண்டு போகட்டும். காவலாளிகள் குழந்தையை பறித்தல்)

விஜ ஐயோ அத்தே !

பத் : குழந்தையைஒன்றும்செய்யாதீர்கள் விட்டுவிடுங்கள்.
[காவலாளிகள் ஓட பத்மாவதி பின் தொடர்கிருள்]

0 0 0

உக் : (மகேசுரனின் முன்பு) ஆகா ! இதுபோன்ற ஒரு பலி கொடுத்த பிறகு வசந்தனின் பட்டாபிஷேகம் நடைபெறுவது சாஸ்திரப்படி சாலச்சிறந்த காரியமாகும் !

வசந்தி: ஆமாம் அந்த வாய்ப்பு நமக்கு வலுவிலே கிடைத்திருக்கிறது. வசந்தன் அதிஷ்டக்காரன்.

உக்: சோழ சாம்ராஜ்யத்தின் இளந்தென்றல் பாவம். பச்சிளங்குழந்தை அப்பன் செய்த பாவத்திற்காக இந்த அரும்பு கசங்கப்போகிறது மனோகரா! உன் அழகான குழந்தையின் திருமுகத்தை ஒருமுறை பார்த்துக்கொள். நீ அடக்கி வைத்திருக்கும் ஆவலையெல்லாம் உதட்டிலே தேக்கி உன் குழந்தையின் இளங்கன்னத்தில் கடைசியாக ஒருமுத்தம் கொடு. (குழந்தையை நீட்டி ஏமாற்றுதல்)

உம் கண்ணீரால் குளிப்பாட்டு உன் பிள்ளை கனியமுதை குழந்தை எதுவுமறியாமல் புன்னகை புரிகிறது.

உக்: உம் சிரிக்கிறாய் பாவம் நன்றாகச் சிரி. அழுதுகொண்டு பிறந்த நீ, சிரித்துக்கொண்டு சாகிறாய் பாண்டிய இரத்தமும் சோழ ரத்தமும் அல்லவா உன் உடம்பில் பாய்ந்து ஓடுகிறது அதனால் மகிழ்ச்சியோடு தான் மரணத்தின் தொட்டிலில் தூங்குவாய்.

வசந்: சீக்கிரம்! (உக்ரசேனன் குழந்தைமீது வாளை ஓங்குதல்

பத்மா: சேனா! (அலறியடித்து ஓடிவருகிறாள்) கொலைவாளை முதலில் என்மீது வீசுங்கள்.

வசந்தி: அதுதான் முடியாது. மரண தேவதையின் கொடிய வாயிலே இந்த குழந்தை விழுவதை நீ கண்குளிரப்பார்க்க வேண்டும் இதற்கும் பிறகுதான் சோழ பரம்பரை சுக்கு நூறாகத் தெரித்து தூள் தூளாகச் சிதறுவதை நான் பார்த்து பரவசமடையப் போகிறேன்.

பத்மா: நிறுத்து வசந்தி நிறுத்து பல ஆண்டுகாலம் என் பர்த்தாவை உன்னுடையவராக்கிக்கொண்டு என் வாழ்வை நிலவில்லா வானமாக்கினாய் பொறுத்துக் கொண்டேன் சபா மண்டபத்தில் சக்ரவர்த்திக்கும் பக்கத்திலே சாம்ராஜ்ய மகாராணிபோல் அமர்ந்துகொண்டாய் அதையும் பொறுத்துக்கொண்டேன். பொல்லாத மொழிபேசி கொல்லாமல் கொன்று போட்டாய அதையுங்கூட பொறுத்துக் கொண்டேன், புலியென என் புதல்வன் சீறி எழுந்த போதெல்லாம் உறைவிட்டு கிளம்பிய வாளை உடனே தடுத்து உன் உயிரைக் காப்பாற்றியிருக்கிறேன் காரணம் என்ன? கத்திமுனையிலே சோழநாட்டின் சொர்ண விக்ரகத்தை நிறுத்தியிருக்கும் புத்திகெட்டவளே உன்னை தான் கேட்கிறேன் நான் பொறுமையாய் இருந்ததற்கு காரணம் என்ன?

வசந்தி: அது உன் பூர்வஜன்ம வினை.

பத்மா: இல்லை புருஷன் மீது வைத்த அன்பு. அவருடைய

பொருள் நீ. அந்த பொருளுக்குத் தீங்கு செய்து கணவருக்கு கவலை உண்டாக்கக் கூடாதென்று கருதினேன். ஆனால் இன்று நீ என் கணவரையே காராக்கிரகத்தில் அடைத்து விட்டாய். வசந்தசேனை இன்று வரை நான் காட்டிய பொறுமையின் பேரால் கேட்கிறேன் உனக்கு நாடுதானே வேண்டும் எடுத்துக்கொள் நடத்து உன் ராஜ்யத்தை! எங்களுக்கு காடுபோதும். எங்கள் எல்லோரையும் விட்டுவிடு.

வசந்தி : ஆ! உங்களை விட்டு விடுவதா ! கனவு காணாதே ! சோழ சாம்ராஜ்யத்தின் சாம்பல்மேடு. இன்னும் அரை நொடியில் என் காலடியில் குவியப்போகிறது.

பத்மா : வசந்தசேனா! உண்மையின் சொரூபம் புயலாக உருவெடுத்தால் அந்த சாம்பல் மேட்டில் நீ அழிந்து விடுவாய் ஜாக்ரதை !

வசந்தி : என்னையா பயமுறுத்துகிறாய் ?

பத்மா : ஆமாம் உன்னைத்தான் வான் பொய்யா நாடு மான் துள்ளும் நாடு தேன் பொழியும் வீடு எங்கள் சோழ மண்டலம் அங்கேகாதல்கமண்டலம்ஏந்திவந்தவளேசூழ்ச்சி பலவகுத்துசுந்தர வாழ்வைசூறையிட்டவளேவந்தவளை வரவேற்றுஇத்தனை நாள்இன்பமாகவாழஇடமளித்தேன் இன்றோ ஆளவதற்கு நீ, மாள்வதற்கு நாங்கள் என்று ஆணவம் பேசுகிறாய் இல்லை. உன்னுடைய அழிவுக்கு நீயே ஆரத்தி எடுக்கிறாய் வீணே அழிந்து போகாதே ?

வசந்தி: என்ன சொன்னாய்? (பத்மாவைவசந்தி அறைகிறாள்)

மனோ அம்மா (அலறி விடுகிறான்)

பத்: மனோகரா! அவனிடம் போகிறாள்) மனோகரா! என் மங்காத புகழ்விளக்கே ! மன்னித்துவிடடா என்னை! சோழ சாம்ராஜ்யத்தின் மேன்மையைக் காப்பாற்றுவதற்காகநீ வீறுகொண்டு எழுந்து வீர காவியம் தீட்டும் போதெல்லாம் எழுத்தாணியைமறைத்துவைத்துஏடுகளை ஒளித்து வைத்தும் தடுத்து நின்ற பழிகாரி நான் தான் தாயின் ஆணையைத் தலைமேல்கொண்ட என் தங்கமே அநீதியை அழித்துவிடு என்று உன் அன்னையே இப்போது உத்தர விட்டாலும் அசையமுடியாத நிலைபெறறுவிட்டாய் என் செல்வமே ! அழிந்தது எல்லாம் அழிந்தது.

மனோ : இல்லை யம்மா.... இல்லை அநீதியை அழித்துவிடு என்று என் அன்னையே இப்போதாவது கட்டளை இடுங்கள்! கடைசிநேரம் கடைசிவேண்டுகோள்!என் தமிழ்த்தாயே இன்பச் சோலையின் இடையே தோன்றிய கணவாயின் வழியாக இந்தப் பூமியிலே குடியேறி நிலைபெற்று விட்ட

குள்ளநரி இன்று ஆட்சிபீடம் ஏறுவதற்கு அச்சாரம் போட்டுவிட்ட அக்ரமத்தைக் கண்டபிறகாவது அனுமதி தருவீர்களா? வாள் வேண்டாம் தாயே வாய்மொழி ஒன்று போதும் படை வேண்டாம் தாயே! தாயின் தடை நீங்கினால் போதும் கடகம் தரவேண்டாம் தாயே ஒரு கண் ஜாடை போதும் உங்களுக்கும் எனக்கும் எல்லோர்க்கும் விடுதலை எங்கே தாயே உத்திரவு" உத்திரவு கொடுங்கள் உருத்தெரியாமல் ஆக்குகிறேன் இவர்களை.

பத்: என் அருமைச் செல்வமே உன் தந்தையின் நன்மைக்காகத்தான் உன் வீரக்கரங்களை கட்டிப் போட்டேன். இந்த விஷமக்காரியின் முன்னே சிரம் தாழ்த்தி நின்றேன் யாருக்காக பொறுமை பொறுமை என்று சொல்லி வந்தேனோ அவரையே சிறையில் பூட்டிவிட்ட பிறகு பொறுமைக்கு எங்கே இருக்கிறது. பொருமை? மனோகரா பொறுத்தது போதும் பொங்கியெழு !

மனோ : அம்மா !

பத்: தாயின் ஆணைகிடைத்துவிட்டது, புறப்படு! மனோகரா ! மனோகரா ! மனோகரா !! மனோகரா!!!

பத்: (அரசன் சிலையிடம் ஓடி) மகாராஜா! நம்முடைய செல்வக் குடும்பம் எப்படி சீரழிகிறது பார்த்தீர்களா? கட்டுண்டு துடிக்கும் மனோகரனைப் பாருங்கள் ! மகாராஜா!!

(உக்ரசேனன் வசந்தி சிரிப்பு)

பத்: ஏன் சிரிக்கிறீர்கள்? செவ்வாழைத்தோட்டத்திலே குதித்தாடும் குரங்குகளே! மங்கை உருவில், மகான் உருவில் இந்த மண்ணை வளைக்கவந்த மகா பாதகர்களே! இப்படி சிரித்தவா வாழ்ந்ததில்லை அழுதவர் கெட்டதில்லை என்று ஜெகம் சொல்லும் சரித்திரத்தை மறந்தவர்களே! செப்படி வித்தையால் செழுந்தமிழர் செங்கோலை முறிக்க வந்த சிறுநறிக்கூட்டமே! சிரிக்காதே! கண்ணீரின் வலிமையை உணரமுடியாத கயவரின் கும்பலே! கண்ணீர் துளிகள் சாதித்ததைகத்திமுனையும் சாதித்ததில்லை என்பதை மறந்துவிட்டு சிரிக்காதே நொந்துபோனவர் மத்தியிலே சந்துமுனை சிந்துபாடும், துரோகிகளே சிரிக்காதீர்கள் சிரிக்காதீர்கள் தாயகத்து மண்ணே! உன் விடகத்து திருவிளக்கு மனோகரனைப்பார்! சோழ மாதா! என் சுந்தரத்தோளிலே வெற்றிமாலை சூட்டிய வீராதிவீரன் துடிதுடிக்கும் கொடுமையைப்பார் அன்னியப் பகைவரின் ரத்தத்தால் உன் அழகு நெற்றிற்கு திலகமிட்ட மைந்தன்.... அய்யகோ! அடிமைத்தளையால் கட்டுண்டு தவிக்கும் காட்சியைப் பார்! சோழ குடும்பத்தின் கொலு மண்டபமே என் வெற்றியின் உருவத்தை இந்த வீணர்கள் மத்தியிலே

எவ்வளவு நேரம் தலை குனிய வைக்கப் போகிருய்? பச்சிளங் குழந்தை பட்டத்திளவரசன்....பாராளும் மன்னவன் அத்தனைபேரையும் பழி வாங்கதுடிக்கும் பாதகியை தாங்கி நிற்கும் பூமிமாதா ! நீ நன்றியுள்ளவள் என்பது உண்மையானல், மறக்குடியில் பிறந்த மாதாக்களின் கண்ணீருக்கு சக்தி உண்டென்பது உண்மையானல் : மாற்ருனுக்கு மண்டியிட்டறியாத மாவீரன் மனோகரன் என்மகன் என்பது உண்மையானல் இந்த சங்கிலி பொடிப்பொடியாகட்டும். அக்ரமக்காரர்களின் சிரிப்பு அடங்கட்டும் இந்த மண்டபமே இடிந்துதூள் தூளாகட்டும் தூள் தூளாகட்டும் ! தூள் தூளாகட்டும் !!!

[மனோகரனின் பலத்தாலும், தாய்மைக் குரலின் உதவியாலும் தூண் நொறுங்குகிறது.]

உக் : பிடியுங்கள் ! அவனை கைது செய்யுங்கள்.

வசந்தி : குத்துங்கள் ! கொல்லுங்கள் !

[உக்ரசேனன் மனோகரனல் கொல்லப் படுகிருன். பாண்டியன் படையும் வருகிறது. குழந்தை கேசரிவர்மனல் காப்பாற்றப்படுகிறது. வசந்தி மனோகரன்மீது வீசிய கட்டாரி வசந்தன்மீது பாய்கிறது]

வசந்தி : வசந்தா !

வசந்தன் : அண்ணு! என்னை ஒரு முறை தம்பி என்று அழைக்கக் கூடாதா! சொல்லு அண்ணு தம்பீன்னு !

மனோ : தம்பி !

வசந் : அண்ணு!இந்தபாவி வீசிய கட்டாரிஉன்மீதுபட்டிருந்தால் நீ எவ்வளவு வலியோடு கஷ்டப்படுவாய்என்பதை நான் உணருகிறேன் ! நீவாழவேண்டும்அண்ணு அண்ணு நீதான் நாட்டை ஆள வேண்டும் நான் சாக வேண்டும்.

[வசந்தன் சாகிருன். மனோகரன் வசந்தியை கொல்லமுயல)

கேசரி : (தடுத்து நிறுத்துங்கள். அவளை நீங்கள் கொல்ல வேண்டாம்! அதற்காகவே பல ஆண்டுகள் காத்திருக்கிறேன், அவள் ஒரே வீச்சில் சாகக்கூடாது அணுஅணுவாக சாகவேண்டும். அருபம் அவளை குகைக்கு இழுத்து செல்லுகிறது]

அர : (பத்மாவதியிடம் என்னை மன்னித்துவிடு பத்மா!

பத் : அப்படியெல்லாம் பேசாதீர்கள்இதோ நம்செல்வத்தை பாருங்கள். [பேரனை பார்த்து சிரித்து மகிழ்கின்றனர்]

[அருபம் வசந்தியை சித்ரவதை செய்கிறது. அருபந்தால் சேர்க்கப்பட்ட சிலை தூள் தூளாக உடைகிறது. வசந்தி சாகிருள்] 0 0

[மனோகரனும், விஜயாவும் படகில் செல்கின்றனர்]

—நிறைவு !—

மனோரா: பாடல்கள்

பாட்டு-1 (வசந்தன்....விகடன்)

சந்தேகம் இல்லே சந்தேகம் இல்லே
நமக்கு சந்தேகம் இல்லே சந்தேகம் இல்லே
எந்த நாளுமே எதிலும் நமக்கு (சந்தே
எள்ளளவாயிலும் உள்ளபடிக்கு
அம்மா அப்பா பெத்தது பிள்ளை சந்தேகம் இல்லே
அவர்களைப் பெத்தது பாட்டன் பாட்டி அதிலேயும் (சந்
சந்தேகம் இல்லே சந்தேகம் இல்லே
காக்கா கறுப்பு—சந்தேகம் இல்லே
கடல் தண்ணி உப்பு சந்தேகம் இல்லே
இதைக் கண்டவர் உண்டவர் சொன்னால் (சந்
ஆண்பிள்ளைக்கு மீசை முளைக்கும் சந்தேகம் இல்லே
அது கிடையாது பெண்பிள்ளைக்கு சந்தேகம் இல்லே
அப்பன்கூட பிறந்தவளத்தை சந்தேகம் இல்லே
அவளுக்கேதான் மீசை முளைத்தால் சித்தப்பன் (சந்
பொம்பளை உருவம் புத்தியை மாத்தும் சந்தேகம் இல்லே
பொண்டாட்டி ரெண்டால் திண்டாட்டம் வருவதும் (சந்
டம்பச் செலவுகள் துன்பம் கொடுக்கும் சந்தேகம் இல்லே
டங்குவாறுதான் அந்து போயிட்டா
சவாரிக்குதிரை வண்டி நிப்பதும் சந்தேகம் இல்லே
தலையணை மந்திரம் குடும்பத்தை கெடுக்கும் (சந்
தாட்யணை மந்திரம் பார்த்தால் சங்கடம் விளைவிக்கும் (சந்
கலையைப் படிச்சவன் நிலையில் நில்லான் சந்தேகமில்லை
கட்டிக் கொண்டவள் பட்டத்தாரி சந்தேகம் இல்லே
காசுக்கு வந்தவள் ஆசைக்காரி சந்தேகம் இல்லே
குட்டி கொழுத்தால் கறிக்காகாது சந்தேகம் இல்லே
குலத்தில் பிறந்தவர் குடிகெட்டாலும்
குணம்போகாது மணம் போகாது....
சந்தேகம் இல்லே நமக்கு ...சந்தேகமில்லே !

பாட்டு-2

தேவசேனை : என்னைப்பாரென்னழகைப்பாரு கண்ணாலே
ரெண்டு கண்ணாலே - பார்த்தா
இன்பலோகம் இங்கே தெரியும் தன்னாலே(எ

ஒருவர் : பேஷ்—பேஷ்

தேவசேனை : மண்ணில் புதைந்த மாசில்லாத பொன்மணி
உயர்ந்த பெண்மணி
மேவி வாடா முல்லை ஈடியிலாப்
பெண்மணி—மேனி (என்னை

இந்த மானிலத்தின் பேதையாய்
வந்தேன் பிறந்தேனே இந்த
சீராரும் செல்வமெனச் சேர்ந்தெடுத்ததேவே
தென்பாண்டிக் கோவே போராடும் திண்புயனே
நீ போன பின்னே நானிருந்தென்ன பயனே
அடிமையாவதோ பிறராட்சி காண்பதோ — துணை
யாருமற்றவளாகினேன் அனாதையானந்தோ —
தன்மானம்
நீங்காத வேதனையை நீக்கவந்த மருந்தே விஷமே (நீங்
நிம்மதியின் விருந்தே நீயன்றி கெதியில்லை நிஜமே

பாட்டு-5 (மனோகரன்-விஜயா)

ஆண் : சிங்கார பைங்கிளியே பேசு — செந்
தமிழ் தேனை யள்ளி யள்ளி வீசு — சிங்கார
பெண் : சங்கம் புகழ் முரசு கொண்ட தனியரசு — என்
தமிழ் மொழிக்கெதுவோ நீர் தரும்பரிசு — சங்கம்
ஆண் : திங்கள் நிறைமலர் முகத்தில்
செவ்விதழ் சேர்த்து நித்தம் திங்கள்
திருவே தருவேன் மனம்போல்
குறையாதொரு நூறுமுத்தம் (சிங்கார
பெண் ; நீரே சொந்தம் மானீர்பேச்சிலே எதிரி - நீரே
ஆண் : அந்த நினைவே மறந்தேன் உன் கண் வீச்சிலே
பெண் : இந்த வீரர் நாட்டுக்கினி அதிபதியே
ஆண் : விஜயாள் ஒன்றே போதும் வெகுமதியே
பெண் : ஆ
ஆண் : ஊம்.... (சிங்கார
ஆண் : பாண்டிநாட்டுப் பூங்குயில்ப்பேடு
ஊஞ்சல் ஆடுதே ஊஞ்சல் ஆடுதே — பாண்டிய
பெண் : அது வேண்டிடும் சோழமண்டலத்தென்றல்
ஓடி வீசுதே ஓடோடி வீசுதே — அது
ஆண் : ஆசைக் கொடி தனிலே
பிணைந்தாடிடும் வேளையிலே — ஆசை
இருவ : ஆணோடு பெண்ணும் கண்ணொடு கண்ணால்
ஜாடைபேசுவதே-மண்டும்ஊடல்பேசுதே (ஆணொ
பெண் : பளிங்கு போல தெளிந்த நீரில்
மீன்கள் துள்ளியாடுதே — இரு
மீன்கள் துள்ளியாடுதே — பளிங்கு
ஆண் : விளங்கும் எந்தன் விஜயாவின்கண்
மீன்கள் ரெண்டும் ஆடுதே — விழி
மீன்கள் ரெண்டும் ஆடுதே — விளங்கும்
பெண் : அலையோடு அலைதாவி ஒன்று சேர்ந்ததே — அலை

ஆண் : ஆம் அதுபோல் நம் இரண்டுள்ளம்
ஒன்று சேர்ந்ததே
உள்ளம் ஒன்று சேர்ந்ததே — ஆம்

இருவ : பளிங்கு போலே தெளிந்த நீரில்
மீன்கள் போலே ஆடுவோம்—இரு
மீன்கள் போலே ஆடுவோம்.

பாட்டு-6 (வசந்தி)

பொழுது புலர்ந்ததே மெல்லென எழுவீர்—பொழுது
விழி மலர என்மீது மலர (பொழுது
இளமாங்குயில்கள் இசை பாடிடவே
பசுந்தோகை மயில் மகிழ்ந்தோடிடவே
வண்டுகள் ரீங்காரம் போலே
இன்புறும் யாழேந்தி காலைப் பண்பாடு (பொழுது
எனதாசையெனும் கடல் மீதினிலே
எழிலாக வரும்ரவிமா மணியே
இணைபிரியேன் உம்மை நானே
என்னுயிரே இன்பத்தேனே பூமானே (பொழுது

பாட்டு-7 (கோரஸ்)

வசந்தவிழா ஒசந்த திருவிழா—வசந்த
மாசிமாத மத்யத்திலே நாம்கொண்டாடும் விழா—மாசி
மணம் பொருந்தும் ஆணும் பெண்ணும்
மகிழ்ச்சியன்பம் தேடலாம்—இதில்
வயது முதிர்ந்த கிழவரும் நல்ல
வாலிபம் கொண்டாடலாம்
மதனும் ரதியும் பவனி வரும் விழா
கொண்டாடும் விழா—மதனும்

வசந்த : என்னப்பா ரென்னழகைப்பாரு கண்ணாலே
பாரு கண்ணாலே
எங்கப்பா போலே இருப்பேன்பாரு பின்னாலே
ஹேஹ ஹேஹ—என்னே

குழு : மாசிமாத மதியத்திலே நாம் கொண்டாடும் விழா
வசந்த விழா! வசந்த திருவிழா

பாட்டு 8 (தலைவனும், கோஷ்டியும்)

கோஷ்டி : கும்புட றமுங்க

தலைவன் : முன்னொரு காலத்தில்—ஆமா
முக்கண்ணனாகிய பரமசிவன் தவத்தைகெடுக்க—ஆமா
முப்பத்து முக்கோடி தேவர்களும்—ஆமா
48000 ரிஷிகளும் ஆமா!

மன்மதனை ஏவிவிட்டார்.... ...ஆ—ஆமா
அப்போது மன்மதனுனவன் ஆ
ஆழாழி முரசொலிக்க ஆமா! முரசொலிக்க
அழகு சந்திரக் குடை விளங்க குடை விளங்க
சேலான கொடி துலங்க—ஆமா! கொடி துலங்க
சேவிழையார் சேனைசூழ—ஆமா! சேனை சூழ
இப்படியாகத்தானே மன்மதன் கிளிப்பரி பூட்டிய
தென்றல் தேரில் ஏறிக்கொண்டு ஆமா
ஈசன் தவம் செய்யுமிடத்துக்கு வந்தான்—ஆமா!

வந்து....
கரும்பு வில்லைக் கரந்தனிலே காமராஜனெடுத்தார்
ஆம் ...காமராஜனெடுத்தார்

அதில்...
கரும்பு நாணையேந்தி முல்லை
அரும்பு பாணந் தொடுத்தார்
தினதெந்தினு தினதெந்தினு தினதெந்தினு—தின்னு
தினதெந்தினு தினதெந்தினு தினதெந்தினு—தின்னு
நிறைஞ்ச தவம் கலைஞ்ச ஈசன்
நெற்றிக் கண்ணைத் திறந்தான்
நெற்றிக் கண்ணைத் திறந்தான்
அப்போ நின்ற மதன் சாம்பலாக
நிலத்தில் வீழ்ந்து எரிந்தான்
அப்போ நின்ற மதன் சாம்பலாக
நிலத்தில் வீழ்ந்து எரிந்தான்
இந்த விதமாகத்தானே—ஆமா
மன்மதன் எரிஞ்ச சங்கதி—ஆமா!
வாயு தேவனுல் அண்ட சரா
சரங்களுக்கு அறிவிக்கப்பட்டது
ரதி தேவிக்கும் தெரிந்தது—ஆமா
தெரிந்தவுடன் அஹா....
ஆமா
ஐயோ நானென்ன செய்வேன்—பிராணநாதா!
ஆருமற்ற பாவியானேன்—பிராணநாதா
குய்யோ முறையோவென்று கூக்குரலிட்டான்
குட்டிக்கரணம் போட்டு குதிகுதிச்சா
வாயை விட்டு—கத்தினு!
மாறடிச்சா—மண்டையொடைச்சாள்!
மாலையறுத்தா—தாலியறுத்தாள்?
ஐயோ ஐய்யோ... ஐயோ ஐய்யோ
இப்படி புரண்டழுதாள்—ஆமாம்

பிரம்மாவிடம் சென்று தாலிப்பிச்சை கேட்டாள் ஆமா !
நடக்கலே....
உம்
இந்திரங்கிட்டே போனு -- ஆமா !
நாரதர்கிட்டே போனு — ஆமா —
சந்திரங்கிட்டே போனு ஆமா
சகல தேவர்கிட்டேயும் போனு — ஆகா
வேலையாகலே
ஓஹோ.......
கடைசியிலே வைகுந்த வாசங்கிட்டப் போனு
போயி மாமாண்ணு — அவரு
ஏமாண்ணுரு.......
எம்புருசெ இல்லியே ! நா
என்ன பண்ணட்டும் அப்படின்னு....
மருமகளே ! நானிருக்கேன்
கவலைப்படாதே அப்படின்னு சொல்லி
ஒம்புருசே ஒங் கண்ணுக்கு மட்டும் தெரிவா
ஆமா.....
உலகத்தார் கண்ணுக்கு தெரிய மாட்டாண்ணு
வரங்கொடுத்தார்
அவங்களும் சந்தோஷமாக வாழுராங்க
அப்பேற்பட்ட
மதனும் ரதியும் பவனிவரும் விழா
கொண்டாடும் விழா
வசந்த விழா....வசந்த திருவிழா

9 விகடன்

விசு : பொம்பளே தானு நீ
பொம்பளே தானு.......போடி
உனக்கு கோடி கோடி புண்ணியமாகப்
போகட்டும் சொல்லு....பொம்பளே

பெ : அட, கண்ணு கெட்டுப் போச்சா....
உனக்கு கண்ணு கெட்டுப் போச்சா...உனக்கு
கல்லுபோலே எதுக்கு நிக்கிற
கட்டழகியைப் பார்த்ததும் கூடகல்லு
கண்ணு கெட்டுப் போச்சா உனக்கு

விசு : ஏண்டியம்மா உனக்கு வயசு எத்தனையாச்சு

பெ : இந்த மாதம் தீர்ந்ததுன்னு இருபத்தஞ்சாச்சு

பாட்டு 10

காதல் கொண்டாடுகிறார் எல்லோரும் காதல்
காவினில் காமன் திருநாளில் ஆண் பெண் காவினில்
காதல் கொண்டாடுகிறார் - காதல்
சீதள மாமலர் செண்டுகள் வீசி—சீதள
சிங்காரமாய் மகிழ்வோடு பேசி—காதல்
வசந்த மாமலர் மாலை
இது வளர்க்கும் சதிபதிமாலை—வசந்த
இசைந்த நேரமிது நன்மாலையே
உயர் இன்பம் தங்கும் நமதன்பும் பொங்கும் இசைந்த
ஓசந்திடும் தோகை மயிலென ஆடி
ஒண்டோடியர் உறவோடு பாடி காதல்

பாட்டு 11

இன்ப நாளிலே இதயம் பாடுதே
ஈருயிரொன்றாய் அன்பு கலந்து
இன்பம் தேடும் நாளிதே திரு நாளிதே
இன்னிசை கீதம் பாடுதே மனம் பாடுதே
இன்ப நாளிதே இதயம் பாடுதே
புது மண மலரின் மதுவினை உண்டு
பூரண நிலவும் சிரிக்குதே
பொன்னொளி நெஞ்சை மயக்குதே
பூரித்தே மனம் பாடுதே
இன்ப நாளிதே —இதயம் பாடுதே
கனிந்தது நெஞ்சம்—முடிந்தது எண்ணம்
கண்டோம் இன்றே அமரலோகமே
கொண்டோம் இன்றே அமுதபானமே
கனவும் நனவாய் மாறுதே
இன்ப நாளிதே—இதயம் பாடுதே

—வணக்கம்—

ஸ்ரீ தனலட்சுமி பிரிண்டர்ஸ், சென்னை-1.

அன்புடையீர்,

இனிக்கும் தேனை தென்னகத்தில் புகழ் பெற்ற
சீர்காழி, T.M.S ன் பக்திப்பாடல் தொகுப்பும்.

ரசிகர்கள் விரும்பிக் கேட்கும் சினிமா படங்களின்
ருசிகரமான கதை வசன புத்தகங்களும்.

அம்மன், ஐயப்பன், அருள்தரும் முருகன்
வரலாறு கூறும் வசனமான பாடல் தொகுப்பும்.

கற்பனை உலகத்தை கண் முன்னே நிறுத்தும்
அற்புதம் நிறைந்த அழகிய சிறுவர் கதைகளும்.

எளியோரும் கல்வி பெற மலிவு விலையில்
நல்ல A.B.C.D. புத்தகமும்.

இதுவரை வெளிவந்த எல்லாச் சினிமா
பாட்டு புத்தகங்களும் எண்ணத்தைக் கவரும்
வண்ணத்துடன் தரும் ஒரே இடம் தென்னகத்தில்
புகழ் கொண்ட ஸ்ரீ தனலட்சுமி புத்தக நிலையமே.

விபரங்களுக்கு:

ஸ்ரீ தனலட்சுமி புத்தக நிலையம்
159, போர்ச்சுகீஸ் சர்ச் தெரு
(ஸ்டான்லி மருத்துவமனை அருகில்)
சென்னை - 600001.